மன்றம்

இரா. நெடுஞ்செழியன். எம். ஏ.

மலர் 4 | 15 - 11 - 55 | இதழ் 14



உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

உரையாடும் ஆற்றல்

இருவரோ, மூவரோ அல்லது பலரோ ஓரிடத்தில் கூடியிருக்கும்போது, கூடியிருப்போரின் கவனத்தை ஈர்க்கும் உரையாடல்கள் நடத்தி, கூடியிருப்போரை மகிழ்வித்துப், பொழுதுபோவதே தெரியாமற் செய்யும் அரும் ஆற்றல் மிகச் சிலரிடத்தே மட்டும் அமைந்திருக்கக் காண்கிறோம். அப்படிப்பட்ட பண்பும், ஆற்றலும் எவ்வளவுதான் முயன்று பார்த்தாலும் பலர்க்கு வருவதேயில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் இயல்பாகவே மிகச்சிறந்த உரையாடற்காரர் என்பதை அவரோடு நெருங்கிப் பழகுபவர்கள் நன்கு அறிவார்கள்.

சிலர் எங்கும், எப்பொழுதும், எவரோடு கூடியிருக்கும்போதும் சிறந்த உரையாடற்காரர்களாகக் காட்சியளிப்பார்கள். ஆனால், அறிஞர் அண்ணா அவர்களோ, குறிப்பிட்ட சில நெருங்கிய நண்பர்களுடன் கூடியிருந்து உரையாடுவதைத்தான் எப்பொழுதும் விரும்புவார்கள். பலரோடு கூடியிருக்கும்படியான நிலைமை ஏற்பட்டாலும், குறிப்பிட்ட சில நெருங்கிய நண்பர்களைக் கூட்டிக்கொண்டு தனிமையான இடத்திற்குச் சென்று இருந்து உரையாடி மகிழ்வார்கள்.

அறிஞர் அண்ணாவின் உரையாடல் கேட்கக்கேட்க இனிமையாகவே இருக்கும். எவ்வளவு நேரமானாலும், மணிக்கணக்கில், நாட்கணக்கில் ஆனாலும், தெவிட்டவே தெவிட்டாது. அண்ணாவின் உரையாடல் கேலி கிண்டல் நிறைந்ததாய், நகைச்சுவை மிக்கதாய்ச் சிறிதளவு பொழுதுபோக்கானதாகவும், பெரிதளவு பயனறிவு பயப்பதாகவும் விளங்கும்.

அண்ணாவோடு கூட இருந்து உரையாடிக்கொண்டிருக்கும்போது பொழுது போவதே தெரியாது ; பசி நேரம் தவறிப்போகும் ; கடமைகளின் நேரங்கள் மாறிப் போகும். முறைப்படி செய்யவேண்டிய அன்றாடக் கடமைகளைப்பற்றிக் கவலைப்படாமல், உரையாடிக்கொண்டே இருப்பார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பெரும்பாலும் பகல்நேரம் இரவாகவும், இரவு நேரம் பகலாகவும் மாறிவிடும். அதாவது இரவிலே நீண்டநேரம் விழித்துக்கொண்டும், பகலிலே நீண்டநேரம் உறங்கிக்கொண்டும் இருப்பார்கள். நண்பர்களைக் கூட்டிவைத்துக்கொண்டு இரவு நேரத்தில் நீண்டநேரம் உரையாடுவார்கள், சில வேளைகளில் பொழுதுகூட விடிந்துவிடும். கூடியிருக்கும் நண்பர்கள், உறக்கம் வரவர, அப்படி அப்படியே இருந்த இடத்திலேயே படுத்து உறங்கிவிடுவார்கள். கடைசி ஒரு நண்பர் விழித்துக்கொண்டு இருக்கும் வரையில், அண்ணா அவர்கள் உரையாடிக்கொண்டிருப்பார்கள். அந்த நண்பரும் அவரையறியாமலேயே உறங்கத்தொடங்கிவிடுவாரேயானால், அண்ணா அவர்கள் வேறு வழியின்றி கண்ணை மூடிக்கொண்டு உறங்க முயலுவார்கள் ; அப்பொழுதும் அவருக்குத் தூக்கம் வருவதில்லை. பொழுது விடிய விடியத்தான் அண்ணா அவர்களுக்குத் தூக்கமும் மெல்ல வந்துகொண்டிருக்கும்.

பேசும் ஆற்றல், எழுதும் ஆற்றலைப்போலவே உரையாடும் ஆற்றலிலும் அறிஞர் அண்ணா அவர்கள் தலைசிறந்து விளங்குபவர் ஆவார்கள்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

15 - 11 - 55 செவ்வாய்க்கிழமை

தமிழ் மாநிலம்

புது மாநில அமைப்புத் திட்டம், வட்டார மொழி அடிப்படையில் உருவாக்கப்படவேண்டும் என்ற கருத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் அழுத்தந் திருத்தமாகவும், திட்டவட்டமாகவும் விளக்கிக் காட்டிவருகிறது.

திராவிட மொழிப் பகுதிகளாகிய முழுத் தமிழகம்—முழு ஆந்திரம்—முழுக் கருநாடகம்—முழுக் கேரளம் ஆகிய நான்கும் மொழிவழி நான்கு மாநிலங்களாகப் பிரிந்து, இனவழி நான்கும் ஒன்றுபட்ட, தன்னாட்சி உரிமை பெற்ற கூட்டாட்சி நாடாக அமையவேண்டும் என்ற கருத்தையும் கழகம் தெளிவாக வற்புறுத்திக் கூறிவருகிறது.

மொழிவழி உருவாகும் புதிய மாநிலங்கள் தம் மொழி—பண்பாடு—நாகரிகம் ஆகியவற்றை உணர்த்தி நிற்கும் பெயர்களையே தமக்குரிய பெயர்களாகப் பெற்றிருக்கவேண்டும் என்ற கருத்து, பொதுவாக எல்லோரிடமும் காணப்படுகிறது; நாமும் இந்தக்கருத்தை வற்புறுத்தி வருகிறோம். இந்தக் கருத்தின் அடிப்படையில் நின்றுதான் ஆந்திரர்கள் தமது புதிய மாநிலத்தை **ஆந்திரம்** என்றும், கேரளத்தார் தமது புதிய மாநிலத்தைக் **கேரளம்** என்றும், கன்னடத்தார் தமது புதிய மாநிலத்தைக் **கருநாடகம்** என்றும் அழைக்க முற்பட்டிருக்கின்றனர். மேற்கண்டவாறே புதிய பெயர்களைப் புதிய மாநிலங்களுக்கு இட்டழைக்க பசில் அலிக் குழுவும் ஒருப்பட்டிருக்கிறது. இந்த முறைப்படியும், மேல் விளக்கப்பட்ட கருத்துப்படியும் தமிழ் பேசும் மாநிலம் **தமிழகம்** என்றோ அல்லது **தமிழ்நாடு** என்றோ அழைக்கப்படவேண்டும் என்று தமிழர்கள் விரும்புவது இயற்கையானது—முறையானது—நீதியானது—நேர்மையானது என்றுதான் எந்த நல்லறிவு படைத்தோரும் எடுத்துக்கூறுவர்—ஒப்புக்கொள்வர். ஆனால் என்ன காரணத்தாலோ பசில் அலிக் குழுவினர் தமிழ் மாநிலத்தைத் **தமிழகம்** என்று அழைக்காமல் **சென்னை மாநிலம்** என்றே அழைத்துள்ளனர். அதற்குத் தாளம்போடும் வகையில் தோழர் காமராசர் அவர்களும் **சென்னை மாநிலம்** என்றே இருக்கலாம்; தமிழகம் என்றோ அல்லது **தமிழ்நாடு** என்றோ பெயர் மாற்றப்படவேண்டிய இன்றியமையாமை இல்லை என்று கூறித் தமது வெண்மையறிவை வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ் மாநிலத்தின் மொழி—பண்பாடு—நாகரிகம் ஆகியவற்றைத் **தமிழகம்** என்ற சொல் உணர்த்தி நிற்பதைப்போல், **சென்னை** என்ற சொல் இம்மியளவும் உணர்த்தாது என்பதை எவரும், நன்கு அறியவே செய்வர். இந்த உண்மையைப் பசில் அலிக் குழுவினர் உணர்ந்து பார்க்க மறந்தனர் அல்லது மறுத்தனர் என்றால் அதில் வியப்படைவதற்கில்லை; ஏனெனில் அவர்கள் தமிழ் மாநிலத்தின்பால் அவ்வளவு அக்கரையுடையவரல்லர்—அவர்கள் தமிழுணர்ச்சி அறவே அற்றவர்கள். ஆனால் தோழர் காமராசர் எங்ஙனம் தமிழுணர்ச்சி அறவே அற்றுப்போயினார்? என்பது தான் நமக்கு மிக்க வியப்பைத் தருகிறது! கல்வியாலும், கேள்வியாலும், சிந்தனையாலும் தமிழுணர்வைப் பெறாத காரணத்தால் தோழர் காமராசர் '**தமிழகம்**' என்ற பெயருக்கும், '**சென்னை**' என்ற பெயருக்கும் உள்ள வேறுபாடு தெரியாமல், "கண்டதே காட்சி! கொண்டதே கோலம்!" என்று இருக்கிறாரோ என்னவோ தெரியவில்லை!

சென்னை மாநிலம் என்ற பெயரிருந்தால் அது உலகோர்க்குத் தெரியும் என்றும், சென்னை மாநிலம் என்ற பெயரிருக்கக் கூடாது என்று பிரிந்துபோகும் பிறர் கூறினால், அதில் பொருள் இருக்கக்கூடும், ஆனால் தமிழர்கள் அந்தப் பெயர் வேண்டாம் என்று கூறுவதில் பொருளே இல்லை என்றும் தோழர் காமராசர் கூறுவது எள்ளி நகையாடப்படவேண்டியதொன்றாக இருக்கிறது. உலகில் எவ்வளவோ நாடுகள்—நகரங்கள்—மாநிலங்கள்—ஊர்கள்—தெருக்கள் — பூங்காக்கள்—மாளிகைகள் ஆகியவற்றின் பெயர்கள் புதியனவாக ஏற்றவகையில் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் புகழெல்லாம் எந்தவகையிலே கெட்டுப்போய்விட்டன? அங்கெல்லாம் வளரும் புகழ் வளர்ந்துகொண்டு தானே இருக்கின்றது! சென்னை மாநிலம் மட்டும் தமிழகம் என்று பெயர் மாற்றிக்

கொள்வதால் எந்தவகையில் கெட்டுப்போய் விடும்? இன்னும் சொல்லப்போனால், தமிழகம் புதிய பொலிவுடனும், புகழுடனும், பெயருட னும் ஓங்கி வளரும் என்பதுதான் உண்மை யாகும். தோழர் காமராசர் இப்படிப்பட்ட சில வற்றை உளறிக் கொட்டித் தன் அறியா மையை வெளிப்படுத்திக்கொள்வதைவிடத் தமிழறிஞர்களின் அறிவுரைகேட்டு நடத்தல் எவ்வளவோ நலம் பயப்பதாக இருக்கும்.

தமிழ் மாநிலம் **தமிழகம்** என்று அழைக்கப் படவேண்டுமே ஒழியச், **சென்னை மாநிலம்** என்று அழைக்கப்படக்கூடாது என்பதற்கு ஆவன வெல்லாம் செய்யத் தமிழர்கள் அனைவரும் முற்படுவோமாக!

இலங்கையில் மொழிப்போராட்டம்

இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் மொழிப் போராட்டத்தில் இப்பொழுது இறங் கியுள்ளனர். இந்தப் போராட்டம் எங்குபோய், எப்படி வெடித்து, எப்படி முடியும் என்பதை இப்பொழுது அறுதியிட்டுக் கூறுவதற்கியலா மல் இருக்கிறது, ஆனால் இந்தப் போராட் டத்தைப் பொறுத்துப் பொதுவாக அண்டை நாடுகள், குறிப்பாகத் தென்னாடு தமிழகம் கண்ணும் கருத்துமாக அக்கரைசெலுத்த வேண்டிய நிலைமையிலிருக்கிறது.

வடக்குப் பகுதியில் தமிழரும், தெற்குப் பகுதியில் சிங்களவரும் வாழும்படியான சிறிய இலங்கைத் தீவில், தமிழும்—சிங்களமும் ஒத்த உரிமைபெற்ற மொழிகளாக இலங்கவேண் டும் என்பதுதான் நியாயமானது என்பதை உலக நல்லறிஞர்கள் எவரும் ஒப்புக்கொள் ளவே செய்வர். அங்குள்ள தமிழர்கள் எவ் வளவோ அமைதியான முறையில், நியாய மான வழியில், நேர்மையான தன்மையில் தம் தாய்மொழித் தமிழின் உரிமையை நிலைநாட்ட முயன்றும், சிங்களவர்களில் வெறிபிடித்தோர் தமிழரின் கோரிக்கையை அடியோடு புறக் கணித்து, வன்முறையில், நியாயமற்ற வழி யில், நேர்மையற்ற தன்மையில் சிங்கள மொழியை ஒரே தனி மொழியாக ஆட்சியில் நிலை நாட்டவேண்டும் என்று துடியாய்த் துடிக்கிறார்கள். தமிழும்—சிங்களமும் ஒத்த உரிமை பெற்றுவாழும் என்று வாக்குறுதி யளித்துவிட்டு, இப்பொழுது வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டிருக்கும் இலங்கை முதலமைச்சர் சர் சாண் கொத்தலாவலை, திரும்பி வந்தபிறகு என்ன முடிவு எடுப்பாரோ தெரியவில்லை! சிங்களவர்கள் தமிழையும் தமிழர்களையும் அழித்துவிட்டுச் சிங்களமொழி யையும், சிங்களவர்களையும் என்றென்றும் ஆதிக்கத்தில் நிலைநிறுத்தவேண்டும் என்று வெறிபிடித்து அலைகிறார்கள் என்பதுமட்டும் தெளிவாகத் தெரிகிறது.

இந்தியத் துணைக்கண்டத்தில், இந்திமொழி வெறியர்கள், இந்தி மொழி தனி வல்லாதிக் கத்தை (ஏகாதிபத்தியத்தை) ஏற்படுத்த எப்படித் துடித்துக்கொண்டிருக்கிறார்களோ, அப்படித்தான் சிங்கள வெறியர்களும் துடிக் கத் துவங்கியிருக்கிறார்கள். இந்திமொழி ஆதிக்கம் தென்னாட்டுத் தமிழர்களிடையே தமிழ் மொழிப் பற்றையும், தமிழ் மாநிலப் பற்றையும், நாட்டுப் பிரிவினைப் பற்றையும் எப்படிப் படிப்படியாக உண்டாக்கி வரு கிறதோ, அப்படியே சிங்கள மொழி ஆதிக்கம் இலங்கைத் தமிழர்களிடையே தமிழ்மொழிப் பற்றையும், தமிழ் மாநிலப் பற்றையும், நாட்டுப் பிரிவினைப் பற்றையும் படிப்படியாக உண்டாக் கிவருகிறது. இலங்கையில் தமிழ் பேசப்படும் பகுதி தனி நாடாக மலரவேண்டும் என்ற கொள்கை நாளுக்குநாள் ஓங்கி வளர்ந்துவரு மேயானால்கூட நாம் வியப்படைவதற்கில்லை; காரணம் என்னவெனில் சிங்களவரின் ஆதிக்கவெறி அந்த அளவுக்குத் தலைதூக்கிக் கொண்டே போகிறது.

சிங்கள மொழிக்கு ஏற்பத் தமிழ் மொழியும் ஒத்த உரிமையுடைய அரசியல்—பொது மொழியாக இலங்கை முழுவதும் இலங்கை அரசினரால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்பது நியாயமான கோரிக்கையாகும்; அப் படிக்கில்லாமற்போகுமேயானால் தமிழ், மாநில ஆட்சிமொழியாக, முழு அளவில் நின்று நில வக்கூடிய முறையில். தமிழ் மாநிலம் ஏற்படுத் தப்படவேண்டும் என்று கோருவதும் நியாய மானதேயாகும். சிங்கள வெறியர்கள் இந்த நியாயமான கோரிக்கைகளுக்கு இடங்கொடுக் காமல் போவார்களேயானால், அவர்களது வெறிச் செயல் தனித் தமிழ்நாடு கோரும் அளவுக்குத் தமிழர்களை துரத்திச் செல்லும் என்பது மட்டும் திண்ணம். அப்படிப் பிரிந்து போகும் தமிழ்நாடு ஒருகால் தாய்த் தமிழகத் தோடு—திராவிடத்தோடு இணைந்துகொள்ள முற்பட்டாலும் முற்படக்கூடும்.

இந்தி வெறியர்கள், இந்தியத் துணைக்கண் டத்தில், தாம் பெரும்பான்மையர் என்று சொல்லி எப்படி வெறியாட்டம் ஆடுகிறார் களோ அப்படியே சிங்களவரும் தாம் பெரும் பான்மையர் என்று கூறி வெறியாட்டம் பயில் கின்றனர். இலங்கைத் தமிழர்களின் நலன் களைக் காப்பாற்ற இலங்கையிலுள்ள தமிழர சுக் கட்சியினரும் பிறரும் அரும்பாடுபட்டு வருகின்றனர். அவர்களது முயற்சி வெல்வ தாக!

கருத்துக் கதிர்

சாத்திரியாரே சாற்றுகிறார்

வடநாட்டவரைத் தென்னாட்டவர் மதிக்கிற அளவுக்குத் தென்னாட்டவரை வடநாட்டவர் மதிப்பதில்லை என்று தி. மு. கழகத்தவர் எடுத்து இயம்பிடும்போதெல்லாம், காங்கிரசுக்காரரும் பிற மாற்றுக்கட்சியினரும் நம்மீது சீறி விழுவதோடு, அது கழகத்தவரின் கற்பனை என்றே சொல்லிடுவர்.

வடநாட்டுக்காரரான தாதாபாய் நௌரோசி, லாலா லசபதிராய், பாலகங்காதர திலகர், சித்தரஞ்சன தாசு, இரவீந்தரநாத தாகூர், கோபாலகிருட்டின கோகலே, சென்குப்தா, அன்சாரி, பண்டிதமோதிலால் நேரு, பண்டித மதன்மோகன் மாளவியா, புலாபாய் தேசாய், மகாதேவ கோவிந்த ரானடே, வல்லபாய் பட்டேல், வித்தல்பாய் பட்டேல், சுபாசு சந்திர போசு, சரத்சந்திரபோசு, பகவத்சிங், இராச குரு, சுகதேவ், கமலாநேரு, காந்தியார் போன்ற பலரின் நினைவின் அடையாளங்களாகப் பூங்காக்கள்—படிப்பகங்கள் — நூலகங்கள்—மாளிகைகள்—மண்டபங்கள் — நகர்கள்—தெருக்கள் — சந்துகள் — சதுக்கங்கள்—திடல்கள்—மைதானங்கள்—மணிக்கூண்டுகள்—வானொலி நிலையங்கள்—பள்ளிகள்—கல்லூரிகள்—தொழிற்கூடங்கள்—விற்பனை நிலையங்கள்—உற்பத்திச்சாலைகள்—சிலைகள் போன்ற பலவற்றையும், தென்னாட்டவர்கள், தென்னாடு முழுவதும் ஏற்படுத்தியிருப்பதை எவரும் காணலாம். ஆனால் தென்னாட்டுக்காரர்களாகிய சங்கரன் நாயர்—வ. உ. சிதம்பரம்—திருப்பூர் குமரன்—விசயராகவாச்சாரியார் — எசு. சீனிவாச அய்யங்கார்—இரெங்கசாமி அய்யங்கார்—கத்தூரிரங்க அய்யங்கார்—வ. வே. சு. அய்யர்—சுப்பிரமணிய பாரதி—தேசீய விநாயகம் பிள்ளை—சத்தியமூர்த்தி அய்யர்—சர். பிட்டி. தியாகராய செட்டி—பனகல் அரசர்—டி, எம். நாயர்—சீனிவாச சாத்திரி—டி. ஆர். வெங்கட்டராம சாத்திரி—திரு. வி. கல்யாண சுந்தரனார்—மறைமலையடிகள் போன்றவர்களின் நினைவின் அடையாளமாக ஏதாவது ஒரு அடையாளத்தை வடநாட்டில் காண முடியுமா? முடியாது! இதை நாம் சொல்லும் போது கேட்கப் பலர் மறுத்தாலும், பார்ப்பன வகுப்பைச் சேர்ந்த முக்கியமான ஒருவரின் மூலம் அதே கருத்தைக் கேட்க அவர்கள் மறுக்கமாட்டார்கள் என்று கருதுகிறோம். அவரை இதோ அழைக்கிறோம் பாரீர்!

இந்திய மத்திய உயர்நீதிமன்ற முன்னாள் முதல் நீதிபதியான தோழர் பதஞ்சலி சாத்திரியார் அவர்கள் 6–11–55-இல் மயிலையில், ரானடே நூல்நிலையப் பொன் விழாவில் பேசும் போது, " நானும் வடநாட்டில் பல நகரங்களைச் சுற்றிப் பார்த்திருக்கிறேன். ஆனால் ஓரிடத்திலாவது இராசாசி மண்டம் அல்லது சீனிவாச சாத்திரி கல்லூரி, அல்லது கிருட்டினசாமி அய்யர் அரசியல் கழகம்போன்ற எதையும் காணவில்லை " என்று குறிப்பிட்டுள்ளார்.

சாத்திரியார் சாற்றுவதைக் கேட்டபிறகாவது பலர்க்குத் தெளிவு பிறக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

மறைவு

திருச்சி அருள்திரு சூசையப்பர் கல்லூரியில் பொருளியல் துணைப்பேராசிரியராகப் பணியாற்றி வந்தவரும், திராவிட முன்னேற்றக்கழகக் கொள்கைகளிடத்து நீங்காப் பற்றுடையவரும், தி. மு. கழகத் தலைவர்களிடம் நெருங்கிய நட்புறவு கொண்டவரும், திருச்சி நகராட்சி உறுப்பினராயிருந்து அரும்பணி ஆற்றிவந்தவரும் ஆன கெழுதகை நண்பர் தோழர் இருதயராசு அவர்கள், தம் இளம்பருவத்தில் 5—11—55-ஆம் நாளன்று மாரடைப்பால் இயற்கை எய்தினார் என்ற கொடுஞ்செய்தி, நம்மையெல்லாம் திடுக்கிடவைத்துத் திகைப்புறச்செய்து, மிக்க துக்கத்திலும் துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது. அவருடைய இழப்பு அவ்வளவு எளிதில் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து வருந்தும் அவரது மனைவிமக்களுக்கும் ஏனைய அவரது குடும்பத்தினர்க்கும், நெருங்கிய நண்பர்களுக்கும் நம் ஆழ்ந்த பரிவு (அனுதாபம்) உரித்தாகுக!

தென்னாடு

தென்னாடு, நில உலக வளர்ச்சி, உயிரினவளர்ச்சி, மனித இன வளர்ச்சி ஆகிய இயற்கையின் பல படிமுறைவளர்ச்சிகளைப் படலம் படலமாகத் தொகுத்து எடுத்துக்காட்டும் ஒரு பெருங்காவிய ஏடாகத் திகழ்கின்றது.

தென்னாடு என்ற பெயர் எப்போது என்ன பொருளில் வழங்கத் தொடங்கிற்று என்று வரையறுத்துக் கூறமுடியாது. 'தென்' என்ற சொற்பகுதி தெற்குத்திசையைக் குறிக்கக்கூடும்! இனிமை என்ற பொருளையும் குறிக்கக்கூடும். இவற்றுள் முந்தியபொருள் எது என்று கூறமுடியாவிட்டாலும், இருபொருளும் தொடர்புடையன என்பது மட்டும் உறுதி.

தென்னாட்டின் தென்கோடியிலுள்ளது தமிழகம். அதில் வழங்கும் தமிழ் மொழி தென்மொழி என்று அழைக்கப்படுகின்றது. தமிழகத்தின் தென்கோடியிலுள்ள பாண்டி நாடு வரலாற்றுக் காலத்திலும் "தென்னாடு" என்று குறிப்பிடப் பட்டது. ஆகவே தென்னாடு என்ற பெயர் தெற்கிலிருந்து பரந்து வளர்ந்த ஒரு நாகரிக நாட்டைக் குறிப்பது என்று கூறத்தகும். வடதிசையில் மற்ற நாகரிகங்கள் புதிதாகத் தோன்றி வளர்ந்தபின், தென்னாடு என்ற இப்பெயரே வடநாடு, வடமொழி ஆகியவற்றினின்று இதனைப் பிரித்தறியவும் உதவியிருக்கக்கூடும்.

அதே சமயம், 'தென்' என்ற சொல்லின் மற்றப் பொருளும் தென்னாட்டு வாழ்வில் வேரூன்றிய பொருளேயாகும். அது 'தேன்' என்ற சொல்லுடன் தொடர்புடையது. தென்னாட்டிலுள்ள எல்லா மொழிகளின் பெயர்களும் இதே பொருளை உடையதாயிருக்கிறது என்று காணலாம். 'தமிழ்' என்ற பெயர் 'இனிமை' என்ற பொருளில் தமிழிலக்கியத்தில் வழங்குகின்றது. 'தெலுங்கு' என்ற பெயரின் பழய வடிவம் 'தெனுகு' என்பதே. இது 'தேன்போன்ற மொழி' என்ற பொருளிலேயே வழங்கிற்று. இதுபோலவே 'கன்னடம்' என்ற சொல், 'கரும்பு' என்ற பொருள்தரும் 'கன்னல்' என்ற பகுதியின் திரிபேயாகும். மலையாளம் 'மலையம்' அதாவது 'தென்றல்' என்ற சொல்லிலிருந்தும், துளுவம் 'துளி' அதாவது 'தேன்துளியிலிருந்தும்', குடகம் என்பது குடம் அல்லது 'குலாம்' அதாவது 'சருக்கரை'யிலிருந்தும் பிறந்த சொற்களேயாகும்.

தென்னாட்டுக்குத் 'தமிழகம்' என்ற பெயரும் 'திராவிடம்' என்னும் பெயரும் பண்டைக்காலத்திலிருந்தே வழங்கியிருந்தன என்று அறிகிறோம். கி. மு. மூன்றும் நூற்றாண்டிலேயே 'வெள்ளைத் தீவு' (மங்களூர்) முதல் மரக்காணம் (சதுரங்கப்பட்டினம்) வரையுள்ள கடற்கரைப் பகுதியைக் கிரேக்கர் தமிரிகா அல்லது தமிழகம் என்று அழைத்தனர். கி. பி. மூன்றும் நூற்றாண்டுக்கு முன்பே முற்றுவிக்கப்பட்ட சமத்கிருத புராணங்கள் இப்பகுதியைத் திராவிடம் என்று கூறின. இதனைத் தமிழகம் என்பதன் சிதைவு என்று சிலரும், 'திரு இடம்' என்பதன் 'மரூஉ' என்று சிலரும் எண்ணுகின்றனர். சுபெயின் நாட்டிலும் பண்டைய ஃவிரான்சு, பிரிட்டன் நாடுகளிலும் இருந்த 'துருயித இனத்தவருடன்' தென்னாட்டவர் கொண்டிருந்த தொடர்பை இச்சொல் காட்டுகிறது எனக்கொள்வர் திருத்தந்தை ஈராசு என்ற அறிஞர்.

—பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்.

அண்டசராசரம்



இரா. செழியன்

(33)

பிதுர்க்களைத் திருப்திப்படுத்த, தான தருமங்களும் சிரார்த்தங்களும் வகைவகையாகக் கூறப்பட்டிருக்கின்றன. தந்தையின் ஆத்மா மேலுலகம் அடையவும், அதற்குமுன் சென்ற முன்னோர்களின் ஆத்மாக்கள் அமைதியாக இருக்கவும், அவர்களின் வழிவந்த ஒரு மகன் சிரார்த்தங்களைச் செய்ய வேண்டும். அந்த சிரார்த்தங்கள் ஆண்டுதோறும், செய்யப்பட வேண்டுமாம். அதிலும் கங்கை நதிக்கரையில் கயை என்ற இடத்தில் செய்யப்படும் சிரார்த்தமே மிக மேன்மையானது என்று விட்டுணு கூறுகிறார்.

“அவன் அரியின் திருவடிகளைப் பூசித்து, பிண்டங்களை அர்ப்பணிக்கவேண்டும்.

கயையில் எவனொருவன் சோற்றுப் பிண்டத்தை—அது சிறு இலையளவு இருந்தால் கூட பாதகமில்லை—அர்ப்பணிக்கிறானோ, அவன் அந்த சிரார்த்தத்தால், ஏழு தலைமுறைகளும், நூற்றியொன்று (101) குடும்பங்களுக்கும் நன்மை செய்கிறான்.

ஆதலால் கயைக்குப்போய், எவன் சிரார்த்தங்களைச் செய்கிறானோ அவன் தன் முன்னோர்களுக்குத் திருப்தியளிக்கிறான். அவனுடைய வாழ்க்கை பயனடைகிறது.”

பிதுர்க்களெல்லாம் தங்கள் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் சிரார்த்தங்கள் செய்கிறார்களா, அதிலும் கயையில் போய் பிண்டம் பிடித்துப் போடுகிறார்களா என்று கவனித்துக்கொண்டிருக்கிறார்களாம். கயையில் பிண்டம்போட்டால் பிதுர்க்கள் குதுகலமடைகிறார்கள். கயையில் சிரார்த்தம் நடைபெறாவிட்டால், பிதுர்க்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். அப்பொழுது மற்றவர்கள் அவர்களைப்பார்த்து “உங்கள் குடும்பங்களில் நல்லவழியில் நடந்து, கயைக்குப் போய் சோற்றுப்பிண்டம் போட யாரும் இல்லையா?” என்று கேட்பார்களாம். ஆதலால் ஒவ்வொருவரும்—ஒவ்வொரு மகனும் தன் மூதாதையருக்குப் பிண்டங்கள்போடவேண்டுமென விட்டுணு அறிவித்தார்.

‘புத்’ என்ற நரகத்திலிருந்து தந்தையை மகன் தப்புவிக்கின்றான். ஆதலால் அவன் புத்திரன் என்றும் பெயர்பெற்றான். ஒவ்வொரு வம்சமும், அதில் பிறக்கும் புத்திரர்களால் உய்வடைகிறதாம். பிள்ளையின் முகத்தைப் பார்த்தாலே போதுமாம், அவனுக்கு மோட்சலோகம் கிட்டிவிடுமாம். பேரனுடைய முகத்தைப் பார்த்தால் அதைவிட மேலானது, மூன்று தலைமுறைக்கு மோட்சத்தில் இடம் தரப்படும்.

வேதங்களிலும் புராணங்களிலும், இறந்தவர்களுக்குச் சிரார்த்தம் செய்யும் வேலைக்காகவே மகன் வேண்டப்படுகிறான். மகன் இடும் பிண்டத்திற்கு ஈடாக வேறு எதையும் சொல்லமுடியாது. ஒரு குடும்பத்தில் மகன் பிறக்கவில்லை, மகனில்லாமலே குடும்பத் தலைவன் இறந்துவிட்டான்; அப்பொழுது என்ன செய்வது?

இதே கேள்வி விட்டுணுவின் உபதேசங்களைக் கேட்டுக்கொண்டிருந்த கருடபகவானுக்கும் உண்டாயிருக்கவேண்டும். மகாவிட்டுணு அந்தக் கேள்விக்குப் பதில் தருகிறார்.

“பழைய பாவத்தால் புத்திரப்பேறு அடையும் பாக்கியம் ஒருவனுக்கு இல்லாவிட்டால், வேறு வழிகளில் புத்திரனை அடையவேண்டும்” (கருட புராணம். 7-வது சருக்கம், 7-வது சுலோகம்).

புத்திரப்பேறு அடைவதை விட்டுணு

விளக்கமாகச் சொல்லவில்லை. மிகச் சூட்சுமமாக "வேறு வழிகளில்" என்று கூறிவிட்டார்.

புத்திரப்பேறு இல்லாதவர்கள் தத்து எடுத்துக்கொள்வது ஒரு வழி. இது இன்று நடைபெறுவது, இந்து சட்டமுறையில் ஒத்துக் கொள்ளப்பட்டது.

புத்திரப்பேறு அடைய, இந்து சாஸ்திரத்தில் சட்ட நிபுணராகக் கருதப்படும் யாக்ஞவல்கியர் ஒரு புது முறையை (ஆனால் புராணங்களில்—புராணகாலத்தில் மிகப் பழகிய முறை) விவரிக்கிறார். அந்த முறை கொஞ்சம் அருவருப்பானது. வடமொழியில் இருப்பதை அப்படியேக் கொடுத்துவிட்டு, மொழிபெயர்ப்பைப் பின் தருகிறோம்.

"அபுத்ரா குர்வனுஜ் ஞாதாதேவரம் புத்ரகாம்யயா ;
ஸபிண்டம்வா ஸகோத்ரம் வாக்ருதாப்யக்தம்
ருத்ரவியாத்."

அதாவது "தனது கணவன் இறந்துவிட்டால், அல்லது அவன் புத்திரனை உண்டாக்கும் சக்தியை இழந்துவிட்டால், புத்திரப்பேற்றை அடைய, மனைவியானவள் பெரியோர்களின் அனுமதியுடன் வசந்தகாலத்தில் உடம்பில் நெய்யைப் பூசித், தன் கணவனுடைய சகோதரர்கள், அல்லது அந்தக் குலத்தைச் சேர்ந்த யாரையேனும் புணர்ந்து கொள்ளலாம். இந்த வகையைக் கருத்தரிக்கும்வரை செய்யலாம்."

புத்திரப்பேறு அடைய, முன்னோர்களைப் புத் என்ற நரகத்திலிருந்து மீட்க, யாக்ஞவல்கியர் இந்தச் சட்டத்தைச் செய்துவிட்டுப் போயிருக்கிறார். ஆரியமதக் கோட்பாடுகளில் சம்பிரதாயச் சட்டங்களில் யாக்ஞவல்கியர் மிகத் தெளிவான முறையில், மிக அநாகரிகமான வகையில், ஒரு புத்திரன் பெறும் வழியைச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். இந்த முறை அந்தக்காலத்தில் குற்றமற்றதாக, இயல்பாகக் கருதப்பட்டிருக்க வேண்டும். ஆரியவர்த்தத்தில் வழக்கத்திலும் இருந்திருக்கவேண்டும். இந்தியாவின் பண்டைப் பெருமையை நிலைநாட்டவல்ல இதிகாசமென்று கூறப்படும் பாரதம் இந்த முறையை முன்வைத்துத்தான துவங்குகிறது.

விசித்திர வீரியன் என்ற அரசனுக்கு' அம்பிகை, அம்பாலிகை என்று இரு மனைவியர் இருந்தனர். இரண்டு மனைவியரிருந்தும் அரசனுக்கு ஒரு மகன் கூடப் பிறக்கவில்லை. மகனில்லாமலே விசித்திரவீரியன் இறந்துவிட்டான். சந்ததிக்குறை வந்துவிட்டதே என்று கவலைகொண்ட விசித்திரவீரியனின் தாய் பரிமளகந்தி, வேதவியாசரை அழைத்து, தன் மருமகள் இருவருக்கும் புத்திரப்பேறு அளிக்கும்படி வேண்டிக்கொண்டாளாம். அந்த மகானுபவரும் ஒப்புக்கொண்டாராம். மாற்றானைப் புணரும்படி மருமகளை மாமியார் கட்டளையிட, நடக்கும் இச்செய்கைக்கு மனம் ஒப்பாமல் ஆனால் மாமியார் கட்டளையை மறுக்கவும் முடியாமல், கண்ணை மூடிக் கொண்டே அம்பிகை சென்றாள், காத்திருந்த வேதவியாசர் அருளினார். ஆனால் அம்பிகை கண்ணை மூடிக்கொண்டே இருந்ததால், "உனக்குக் குருடன் மகனாகப் பிறப்பான்" என்று கூறினார். அடுத்தபடி சென்ற அம்பாலிகை (தான் உடன்படும் செய்கையால்) மிக அச்சத்துடன் வெளுத்து இருக்க, அவளுக்குப் புத்திரப்பேறு அருளிய வியாசர் "உனக்கு உடல் வெளுத்த மகன் பிறப்பான்" என்று சொன்னார். இவ்வாறு குற்றங்களையுடைய மக்கள் பிறப்பார்களென்று கேள்வியுற்றதும், பணிப்பெண்ணாக இருந்த ஒருத்தியை வியாசரிடம் அனுப்பினார்கள். அவள் வியாசர் மகிழும்விதத்தில் நடந்துகொண்டாள். "அவளுக்கு நல்ல புத்திரன் உண்டாவான்" என்று சொல்லி, வியாசர் தாம் வந்த காரியம் முடிந்ததும், வேதங்களைத் தொகுக்கும் வேலையில் ஈடுபடச் சென்றார்.

கணவன் இருந்தாலும் இறந்தாலும், பெரியோர்களின் அனுமதியுடன் புத்திரர்களைப் பெறும் வகை பாரத காலத்திலிருந்து அவர்களால் கையாளப்பட்டிருக்கின்றது, யாக்ஞவல்கியர் அதைச் சட்டத்திலொன்றாகத் தொகுத்துவிட்டார். இவ்வாறு இரண்டு தந்தையர்களைப்பெற்ற குமாரர்கள், எப்படி சிரார்த்தம் செய்யவேண்டுமென்று விதிகளும் மந்திரங்களும் எழுதபபட்டுள்ளன. சிரார்த்த மந்திரங்களில் ஒன்றில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

"ஒருவனுக்கு இரண்டு தந்தைகளிருந்தால், ஒரு பிண்டத்திலேயே அவ்விருவர்களையும் குறிக்கவேண்டும். சிரார்த்தகாலத்தில் எழுந்து நின்று கீழ்க்குறித்தபடி சொல்லவேண்டும்.

'தந்தையே! என் தாய் ஒழுக்கம் தவறிவிட்டாள். அவள் வேறுவழியில் சென்றதால் வேறொருவரிடமிருந்து அவளடைந்த வீரியத்தை உம்முடையதாக நீர் நினைத்துக் கொள்ளவேண்டுகிறேன். (அப்படிப் பிறந்தவனாகிய) நான் கொடுக்கிற பிண்டத்தைத் தன்

மகனுல் கொடுக்கப்படுகிறதாக நினைத்து ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.''

இது சிரார்த்த பிரமாணங்களில் ஒன்ருகச் சொல்லப்படுவதாகும்.

யாக்ஞவல்கியரைவிட, மனு இன்னும் விரிவானமுறையில், பிதுர்க்களைத் திருப்திப்படுத்தவும், சிரார்த்த காரியங்களைச் செய்யவும், எந்தெந்த வகையான புத்திரர்கள் ஒருவனுக்குக் கிடைக்கக்கூடும் என்று எழுதி வைத்துள்ளார். மனுவின் கோட்பாடுபடி, 12 வகையான புத்திரர்கள் இருக்கக்கூடும், அவை வருமாறு:

1. ஒளரசன் : தன் சாதியைச் சேர்ந்தவளாகவும், கன்னியாகவும் இருப்பவளை ஒருவன் விவாகஞ்செய்து அவளிடத்தில் அவனுக்குப் பிறக்கிற மகன் ஒளரசன் என்று கூறப்படுவான்.

2. சேத்திரசன் : புத்திரன் இல்லாமல் கணவன் இறந்துபோனுல், அல்லது கணவன் பேடியாகவோ, புத்திரப்பேறு அளிக்கமுடியாதபடி கொடியநோயாளனுகவோ இருந்தால், அவனுடைய மனைவி கணவனின் சகோதரன் அல்லது நெருங்கிய உறவினரிடத்தில் விதிப்படி சேர்ந்து பெறுகிற பிள்ளை சேத்திரசன் என்று பெயர் பெறுவான்.

3. தத்தன் : புத்திரப்பேறு இல்லாதவன், பிறரிடமிருந்து அவர்களுடைய முழுச்சம்மதத்துடன் அவர்களுடைய பிள்ளையைத் தன்னுடைய பிள்ளையாக ஏற்றுக்கொண்டால், அந்தப் பிள்ளைத் தத்தன் என்று அழைக்கப்படுவான்.

4. கிரத்திரன் : தன்சாதியைச் சேர்ந்தவனுகவும், பிதுர்க்களுக்குச் சிரார்த்தங்கள் செய்வதாலும், செய்யாமறபோவதாலும் வரும் பலாபலன்களை நன்கு உணர்ந்தவனுகவும், தாய் தந்தையர்களுக்குச் செய்யும் கடைமைகளைத் தெரிந்தவனுகவும் இருக்கும் பிள்ளையைத் தன் பிள்ளையாகப் பாவித்து தன்னுடன் வைத்து ஒருவன் பாதுகாத்து வந்தால், அவன் கிரத்திரபுத்திரன் என்று குறிக்கப்படுவான்,

5. கூடோத்பந்நன்: ஒரு மனைவி, தன் கணவன் வீட்டிலிருக்கும்போது கணவனுக்குத் தெரியாமல், மற்ருெருவனுடன் சேர்ந்து பிள்ளையைப் பெற்ருல், அந்தப் பிள்ளை அவளுடைய கணவனுக்குக் கூடோத்பந்ந புத்திரன் என்ற முறை ஏற்படும்.

6. அபவித்நன் : தாய்தந்தையரால் கைவிடப்பட்டு, அல்லது தாயாலோ. தந்தையாலோ எறிந்துவிடப்பட்டுத் தனியாகக் கிடக்கும் பிள்ளையை ஒருவன் வளர்த்தால், அந்தப் பிள்ளை வளர்ப்பவனுக்கு அபவித்த புத்திரன் என்று அழைக்கப்படுவான்.

7. காநிநன் : ஒரு பெண் விவாகத்திற்கு முன் தந்தையின் வீட்டிலிருக்கும்பொழுது யாருக்குந் தெரியாமல் ஒருவனைச் சேர்ந்து பிள்ளையைப் பெற்றுவிட்டால், பின்பு அவளை விவாகம் செய்துகொள்ளும் மற்ருெருவனுக்கும் முதலில் அவள் பெற்ற பிள்ளை காநிநபுத்திரன் ஆவான்.

8. சகோடன் : விவாகம் ஆவதற்கு முன்பு ஒரு பெண் கர்ப்பமடைந்து, அவள் கர்ப்பமாக இருப்பதை அறிந்தோ, அறியாமலோ ஒருவன் அவளை விவாகம் செய்துகொண்டால், பின் அவளுக்குப் பிறக்கிற பிள்ளை விவாகஞ் செய்துகொண்டவனுக்கு சகோடபுத்திரன் என்ற முறை பெறுவான்.

9. கிரீதன் : பிள்ளையில்லாத ஒருவன், ஒரு பிள்ளையை அவன் தாய் தந்தையரிடம் விலை கூறி வாங்கிக்கொண்டால், அந்தப் பிள்ளை கிரீதபுத்திரன் என்று சொல்லப்படுவான்.

10. பௌநற்பவன் : ஒரு மனைவி தன் கணவனிடமிருந்து பிரிந்தாவது, அல்லது அவன் இறந்தபிறகாவது, தானுகவே வேருெருவனைச் சேர்ந்து பிள்ளையைப் பெற்ருல், அந்தப் பிள்ளை, அவளுடைய கணவனுக்கு பௌநற்பவ புத்திரன் ஆவான்.

11. சுயதந்தன் : தாய்தந்தையர்கள் இறந்துபோனதாலோ, அல்லது காரணமின்றி தாய் தந்தையரால் நீக்கப்பட்டதாலோ, ஒரு பிள்ளைத் தானுகவே ஒருவனிடம் வந்துவிட்டால், அந்தப்பிள்ளையைச் சுயதத்த புத்திரன் என்று அழைப்பார்கள்.

12. பார்சவன் : உயர்ந்த சாதியில் பிறந்தவன் தாழ்ந்த சாதியில் பிறந்த ஒரு பெண்ணிடம் காமத்தினுல் பெற்ற பிள்ளை பார்சவ புத்திரன் என்று அழைக்கப்படுவான்.

இந்த பன்னிரண்டுவகைப் புத்திரர்களில் முதலில் கூறப்பட்ட ஒளரசன், சேத்திரசன்,

தத்தன், கிருத்திரியன், கூடோத்பன்னன், அபவித்தன் ஆகியவர்கள் தந்தை சேர்த்த பொருளையன்றி, முன்னோர்களின் சொத்துக்களுக்கும் (அதாவது பிதுராஸ்திகளுக்கும்) உரிமையுடையவர்கள். மற்ற அறுவகைப் புத்திரர்களும் தந்தையின் பொருளுக்குமட்டும் உரிமையுள்ளவர்கள். பிதுர் சொத்துக்கு உரிமை கிடையாது.

புத் என்ற நரகத்திலிருந்து மீளவும், பிதுர்க்களுக்கு சிரார்த்தம் செய்வதற்கும் பிள்ளை வேண்டும் என்று வேதங்களும், புராணங்களும் எச்சரிக்க, எப்படியாவது பிள்ளையைப் பெற்றாகவேண்டும் என்ற கவலையால், வழிமுறைகள் அதிகமாகிவிட்டன. பின் மனு போன்ற சட்ட நிபுணர்கள் தம்முடைய சட்டங்களில், அந்தப் பழக்க வழக்கங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, வரையறுக்கவேண்டிய அவசியம் வந்தது. இவைகளுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்தது சிரார்த்தம் செய்ய, பிண்டம்போட பிள்ளைவேண்டும், என்ற அடிப்படையான கருத்துதான். பிதுர் லோகத்திற்குப் போய்ச்சேரவேண்டிய தானங்களைத்தர, பிள்ளை ஒருவனால்தான் முடியும் என்பது புராண நம்பிக்கை.

மகனையடையும் வழிகளைப்பற்றி புராணங்களும், யாக்ஞவல்கியர், மனு போன்றவர்களும் அதிலுள்ள கீழ்த்தர முறைகளை, ஒழுக்கக் கேடுகளைக் காணவில்லை. ஒருவனுடைய மனைவி மாற்றானுடன் செல்ல, கணவனுடைய அனுமதி இருந்தால் சரியானது, பெரியோருடைய சம்மதம் இருந்தால் முறையானது, பசுவின் நெய் பாவத்தைப் போக்கும் மருந்து, என்று வேதபுராணங்களும் சாஸ்திர நிபுணர்களும் அதற்கான முறைகளையும், நுணுக்கங்களையும் ஆராய்ந்தார்களே தவிர, சமூகத்திற்கும் குடும்பத்திற்கும் கேடுதரும் ஒழுக்கக் குறைகளாக அவற்றை அவர்கள் கருதவில்லை. கற்பிழத்தல் அவர்களுடைய அகராதியில் கடுமையான குற்றமாகப்படவில்லை. கணவன், சுற்றத்தார், பெரியோர்கள், இவர்கள் சம்மதத்துடன் மாற்றானிடம் செல்வது— பல சமயங்களில் மனைவியர்களின் விருப்பத்திற்கு மாறாக மாற்றாரிடம் செல்லும்படி பெரியோர்களால் கட்டாயப்படுத்தியிருக்கிறார்கள், பாரதத்தில் வருவதுபோல—அந்தச் செய்கை தவறானதாகக் கருதப்படவில்லை. கணவனுக்கும் மற்றவர்களுக்கும் தெரியாமல் மாற்றானுடன் சென்றால்கூட, அதுகூட சாதாரணத் தண்டனையுடன் விடப்பட்டுவிடும், சோரம்போகும் சுந்தரிகளுக்கு யாக்ஞவல்கியர் கீழ்க்கண்ட தண்டனையைத்தான் தருகிறார்.

“விபசாரம் போனவளின் மயிரை எடுத்து விட்டு, வெறுந்தரையில் படுக்கச்செய்து, வேளைக்கு ஒரு உருண்டைச் சோறுமட்டும் கொடுக்கவேண்டும். இவ்வாறு ஒரு வருடம் செய்தால், விபசாரதோஷம் நீங்கிவிடும்.”

எவ்வளவு சுலபமான பிராயசித்தம்? இந்து மதத்தின் சட்ட நிபுணர் யாக்ஞவல்கியரே இவ்வளவு சாதாரண தண்டனையுடன் விபசாரத்தைக் கருதினால், புராணக்காரர்களுக்குச் சொல்லவேண்டுமா? கற்பைக் கால்தூசியாக்கி, விபசாரத்தை வெண்சாமரமாக்கி, ஒழுக்கத்தை ஒதுக்கித்தள்ளினர். அவர்கள் எழுதித்தள்ளிய கதைகளும் இதிகாசங்களும் ஒழுக்கக்கேடுகள் மலிந்து, நாட்டைக் கெடுக்கும் சாதனங்களாயின. புராணங்களை படிப்போருக்கும், யாக்ஞவல்கியர் போன்றோரின் சட்ட நூல்களைப் படிப்போருக்கும், விபசாரம் பெருங்குற்றமாகப் படாது. அதைச் செய்தாலும், சுலபத்தில் தீர்த்துவிடக்கூடிய “பிராயச்சித்தம்” இருக்கும்பொழுது, அவர்கள் ஏன் கவலைப்படவேண்டும்? மிகுந்த துணிவுடன், தேவர்களும், மூவர்களும் செய்த “தேவலீலைகளை” இவர்களும் செய்யத்தொடங்குவார்கள். புராணத்தில் அதைப் போற்றிக் கதைகள் இருக்கின்றன, சாஸ்திரத்தில் அது கண்டிக்கப்படவில்லை, சட்டத்தில் அதற்கு பிராயச்சித்தம் இருக்கின்றது.

(தொடரும்)

தமிழர் கலப்பு இனமா?

இங்கு காட்டப்பட்டிருக்கும் படம், அமெரிக்காவில், சிகாகோ நகரில், சிகாகோ இயற்கை வரலாற்றுக் காட்சியில் (Chicago Natural History Museum) காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கும் வெண்கலச்சிலையின் நிழற்படமாகும்.

அந்த வெண்கலச்சிலையின் அடியில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருக்கிறதாம்.

CHICAGO NATURAL HISTORY MUSEUM

Formerly Field Museum of Natural History

Chauncey Keep Memorial Hall

TAMIL TREE - CLIMBER

The Tamils are a mixture of White and Negro stocks and have dark - brown skin and wavy hair. They climb toddy palms to obtain sap for making wine.

[சிகாகோ இயற்கை வரலாற்றுப் பொருட்காட்சி

முன்னால் பீல்டு இயற்கை வரலாற்றுப் பொருட்காட்சி

சான்சி கீப் நினைவு மண்டபம்

ஒரு தமிழ் மரமேறி

தமிழர்கள் எனப்படுபவர்கள் வெள்ளையர் இனமும், நீக்ரோ இனமும் கலந்த ஒரு கலப்படமாவார்கள். அவர்கள் கரும்பழுப்பு நிறங்கொண்ட தோலையும், சுருள் மடிப்புகொண்ட தலைமயிரையும் உடையவர்கள். அவர்கள் மது செய்வதற்கான சுவைநீரைப் பெறக் கள்ளிறக்கும் பனைமரங்களில் ஏறுகிறார்கள்.]

இந்தச் செய்தியைக் கேள்வியுறும் ஒவ்வொரு மறத்தமிழரும் குருதிகொதித்து எழுவர் என்பது திண்ணம். உண்மைக்குப் பரிந்து பேசிய உலக வரலாற்றாசிரியர்கள் பலரும் எழுதிய வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால், தமிழர்கள் அறிவுவலிவுக்கும், ஆற்றல் திறனுக்கும், நாகரிக மேம்பாட்டிற்கும், பண்பாட்டுச் சிறப்புக்கும் மிகப் பெயர்போனவர்கள் என்பதை எவரும் காணலாம். தமிழர்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், திராவிட இனம் உலக மக்களினங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் முந்திய சிறப்புப் படைத்தது என்றும், மிகப் பழம்பெருங் காலந்தொட்டே திராவிடர்கள் சிறந்த—தூய்மையான—தனி இனமாகப் புகழோடும் பொலிவோடும், பெருமையோடும் வாழ்ந்துவந்தார்கள்—வாழ்ந்து வருபவர்கள் என்றுந்தான் எல்லா மேலைநாட்டு—கீழைநாட்டு வரலாற்றாசிரியர்கள் இதுகாறும் எடுத்தியம்பி வந்திருக்கிறார்கள். 'தமிழர்கள் கலப்பட இனத்தைச் சார்ந்தவர்கள், அதுவும் வெள்ளையர்க்கும் நீக்ரோவுக்கும் பிறந்தவர்கள்' என்று உளறிவைக்கக்கூட எந்தக் குறையறிவுடைய வரலாற்றாசிரியனும் இதுவரையில் துணிவு கொண்டதில்லை. உண்மை இவ்வாறு இருக்க, யாரோ ஒரு கயமைப்பண்பு படைத்த அறிவிலி, சிகாகோ கண்காட்சியில் மேற்கண்டவாறு எழுதிவைத்திருப்பது தமிழர்களைப் பெரிதும் பழித்து இழித்துக் கூறும் செயலாகும். இதனை, உண்மை வரலாறு அறிந்த அமெரிக்க வரலாற்று ஆசிரியர்கள் எப்படி அனுமதித்தார்கள்? அங்கு சென்றுவரும் இந்தியரும், குறிப்பாகத் தமிழரும் இதனை எப்படி விட்டுவைத்தார்கள்? என்பதை நினைக்க நெஞ்சு வேதனையுறுகிறது.

இந்த இழிந்த பொய்மையை நிலைநாட்டியிருப்பது அமெரிக்கரின் பெருங்குற்றமாகும்; இதனை அகற்ற இதுவரையில் முயலாமலிருந்தது தமிழர்களின் பெருங்குறையாகும். உண்மை, நிலைபெற இந்தக் குற்றமும் குறையும் உடனடியாகக் களையப்படவேண்டும். இந்த வெண்கலச்சிலை அடியோடு அகற்றப்படவேண்டும் அல்லது அதன் அடியில் உள்ள பொய்மைக்கூற்று அழிக்கப்படவேண்டும். இங்குள்ள அமெரிக்கத் தூதுவர் அலுவலகத்தின்மூலம் இந்தச் செயலைச் செய்ய இந்தியப் பேரரசினரும், குறிப்பாகச் சென்னை மாநில அரசினரும் முந்துவார்களாக! தமிழார்வங் கொண்டோர் அனைவரும் அதற்குத் தூண்டுகோலாக அமைவோமாக! ஆவனவெல்லாம் செய்ய முற்படுவோமாக!

உயிர்க்காட்சிச்சாலை

மாநகர்களில் இருக்கவேண்டியனவாக, மக்கள் கண்டு மகிழும் பொழுதுபோக்கு இடங்களாக உயிர்க்காட்சிச் சாலைகள் (Zoological Gardens) இன்று எல்லா நாடுகளிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பல உயிரினங்களைப் பிடித்து அவைகளை ஓரிடத்தில் அடைத்து உயிர்க்காட்சிச்சாலை அமைப்பதில் பன்னெடுங்காலமாகவே அதிகக் கவனம் செலுத்தப்படாமலிருந்து, சென்ற நூற்றாண்டில்தான் அதன் வளர்ச்சியில் எல்லா நாடுகளும் அக்கறை கொண்டன.

மனிதன் ஆதிகாலத்தில் விலங்குகளோடு விலங்காக காடுகளில் அலைந்து திரிந்தபோது கொடிய விலங்குகளைக் கண்டு அஞ்சியே வாழ வேண்டியவனாக இருந்தான். தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முதலில் மரங்களிலும், இயற்கையான மலைக்குகைகளிலும் வாழத் தலைப்பட்டான். காலம் செல்லச்செல்ல அவனது அறிவு வளரவளர தன்னை விலங்குகளினின்றும் காத்துக்கொள்ளப் பல தேவைகளை உணர ஆரம்பித்தான். குகைகளைப்போலவே வீடுகளைக் கற்களால் அமைத்து விலங்கு புக முடியாமற் செய்தான். தனித்தனியே வெவ்வேறு இடங்களில் வாழ்வதைவிட மனிதர் எல்லோரும் கூடி வாழ்ந்தால், கொடிய விலங்குகளைக் கூட்டாகச் சேர்ந்து எதிர்க்கலாம் என்று கண்டு கூடிவாழ முற்பட்டான். காடு, கரம்புகள் அழிக்கப்பட்டு முதலில் சிற்றூர் தோன்றியது. பின் நாகரிகம் மேம்பட நகர்கள் பெருகி வாழ்க்கை வசதிகளும் பெருகின. ஆனால் வன விலங்குகள் அவ்வப்போது நகருக்குள் புகுந்து நாசம் விளைவிக்க ஆரம்பித்தன. ஆகவே தொல்லைதரும் விலங்கினத்தை அருகேயுள்ள காடுகளிலிருந்து விரட்ட, அழிக்க, மனிதர்கள் கூட்டாகச் சேர்ந்து காட்டிற்கு வேட்டையாடச் செல்லும் பழக்கத்தை மேற்கொண்டனர்.

காட்டில் சென்று வேட்டையாடும்போது விலங்குகளிடத்து பல தன்மைகளை அறிய முற்பட்டு அதற்குத் தகுந்தாற்போல் வேட்டையாடி விலங்குகளை வீழ்த்தலாயினர். இப்படிப் படிப்படியாக வேட்டையாடும் பழக்கம் வளர்ச்சிபெற்று, பிற்காலத்தில் நாடு என்றும், மன்னன் என்றும் ஏற்பட்டபோது வன விலங்குகளினின்றும் குடிமக்களைக் காப்பாற்ற மன்னன் வேட்டையாடுதலைத் தனது இன்றியமையாக் கடமையாகக்கொண்டு, நல்ல பயிற்சியுடைய வீரர்களை எப்போதும் தன்னிடத்தே வைத்து ஆதரிக்கவேண்டியவனானான்.

நாளாகவாக, அவசியத்தின் காரணமாகத் தோன்றிய வேட்டையாடும் பழக்கம், ஒரு பொழுதுபோக்கும் சாதனமாக மாற ஆரம்பித்தது. அவசியம் ஏற்படாத காலத்திலேயும் மன்னர் பலர் காட்டிற்குள் புகுந்து வேட்டையாடி மகிழ்ந்தனர். அப்படி வேட்டையாடித் திரும்பும்போது தங்களது வீரத்திற்கு எடுத்துக்காட்டாகச்சில விலங்குகளையும் மன்னர்கள் மிகுந்த கண்காணிப்புடன் உயிருடன் பிடித்து வந்து குடிமக்களுக்குக் காட்டலாயினர். இவ்விதம் வந்த விலங்குகளை தங்கள் அரண்மனைகளில் ஒருபுறத்தே கூண்டுகளில் அடைத்து வைத்து அவைகளுக்கு வேண்டிய உணவு வகைகளையும் கொடுத்து வளர்க்க ஆரம்பித்தனர். இதுவே உயிர்க்காட்சிச்சாலைகளின் தோற்றமாகும். அந்தக் காலங்களில் உயிர்க்காட்சிச்சாலைகளை வைத்துப் பராமரிக்கவும் செல்வத்தில் சிறந்த அரசர்களால்தான் முடிந்தது. பண்டைய அரசர்கள் பலர் உயிர்க்காட்சிச்சாலைகள் ஏற்படுத்தி வளர்த்திருக்கிறார்கள்.

நமக்குக் கிடைத்திருக்கும் வரலாற்றுக் குறிப்புகளின்படி முதல் உயிர்க்காட்சிச்சாலை சீனாவில்தான் தோன்றியிருக்கிறது. சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன்னர் சௌ (Chou) என்ற மரபின் முதல் அரசன் ஒரு உயிர்க்காட்சிச்சாலையை ஏற்படுத்தினான். அது அறிவுப் பூங்கா (Intelligence Park) என்று அழைக்கப்பட்டது. அறிவியல் நோக்கத்திற்காகவும் கல்விப்பயிற்சிக்காகவும் அது பயன்படுத்தப்பட்டது என்று தெரியவருகிறது.

அலெக்சாந்திரியாவில் ஆண்டுவந்த இரண்

டாவது தாலமி (Ptolemy II) என்ற அரசன் புகழ் பெற்ற விலங்கினக் கூட்டத்தை ஏற்படுத்தியிருக்கிருன்.

பண்டைய கிரேக்க, ரோமர் காலங்களில் பிற நாட்டு விலங்குகளை வளர்ப்பதில் பிரபுக்கள் கவனம் செலுத்தினராம். நீரோ என்ற மன்னனது அரண்மனையில் பலவகைப்பட்ட பறவைகளும் மிருகங்களும் இருந்தனவாம். நீரோவின் மனைவி எப்பொழுதும், பழக்கப் படுத்தப்பட்ட ஒரு புலியை தன்னுடன் அழைத்துச் செல்வாளாம். காடுகளில் வேட்டையாடி பல விலங்குகள் கொண்டுவரப்பட்டாலும் அவைகள் பெரும்பாலும் மனிதர்கள் போரிடும் கண்காட்சிக்கே பயன்படுத்தப்பட்டன.

இங்கிலாந்தில் ஆட்சி செலுத்திய முதலாம் ஹென்றி (1100—35) ஆக்ஸ்போர்டுஷயரிலுள்ள உட்ஸ்டாக் என்னுமிடத்தில் ஒரு உயிர்க்காட்சிச்சாலையை ஏற்படுத்தினுன். இச்சாலை மூன்றும் ஹென்றியினுல் லண்டன் மாநகருக்கு மாற்றப்பட்டு 1828 ஆண்டு வரையிலும் அங்கேயே பாதுகாக்கப்பட்டது.

பிரான்சு நாட்டில் கி. பி. 1333-ல் ஆரும் பிலிப் (Phillip VI) என்ற மன்னன் பாரிசில் ஒரு உயிர்க்காட்சிச்சாலையை ஏற்படுத்தினுன். பின்னர் தோன்றிய அரசர்கள் அவ்வப்போது பல உயிர்க்காட்சிச் சாலைகளை ஏற்படுத்தினர். ஆனல் 18-ம் நூற்ருண்டில் அரசாண்ட பதினுன்காம் லூயி என்ற மன்னன் ஒரு புகழ் பெற்ற உயிர்க்காட்சிச்சாலையை வார்சேல்ஸ் என்னுமிடத்தில் ஏற்படுத்தினுன். இது பிரெஞ்சுப் புரட்சியின்போது அழிக்கப்பட்டாலும் மறுபடியும் 1793-ல் பாரிசில் ஏற்படுத்தப்பட்டது.

ஜெர்மனியில் 1554-ல் முதலாம் அகஸ்டஸ் என்பவரால் டிரெசுடனின் என்ற இடத்தில் ஒரு உயிர்க்காட்சிச்சாலை ஏற்படுத்தப்பட்டது.

பதினைந்தாம் நூற்ருண்டில் மெக்சிகோவில் நெசாவல்கயோடல் (Nezahualcoyotl) என்ற அரசன் உயிர்க்காட்சிச்சாலையொன்றைத் தோற்றுவித்திருக்கிருன்.

வட அமெரிக்காவில் சென்ற நூற்ருண்டில்தான் உயிர்க்காட்சிசாலை அமைக்கப்பட்டது. நியூயார்க்கைச் சேர்ந்த பிராங்ஸ்பரோ என்னுமிடத்திலுள்ள உயிர்க்காட்சிசாலை 1899-ல் ஆரம்பிக்கப்பட்டதாகும். இன்று உலகிலுள்ள பெரும் உயிர்க்காட்சிசாலைகளுள் இதுவும் ஒன்ருகும். பிலடெல்பியாவில் உள்ள உயிர்க்காட்சிசாலை 1859-ல் அமைக்கப்பட்டதாகும். அறிவியற் கல்விக்காகவும், மக்கள் பொழுதுபோக்கவும் 1890-ல் வாசிங்டன் நகரில் ஒரு உயிர்க்காட்சிசாலை ஏற்படுத்தப்பட்டது.

ஆசியாவிலுள்ள உயிர்க்காட்சிச்சாலைகளில் கல்கத்தாவிலுள்ள அலிப்பூர் உயிர்க்காட்சிச்சாலைதான் புகழ்பெற்றதாகும். அது 1875-ல் துவக்கப்பட்டது. ஆனல் இந்தியாவில் முதன் முதல் தோன்றியது சென்னையில் உள்ள உயிர்க்காட்சிச்சாலையாகும்.

அனேகமாக எல்லா நாடுகளிலும் சென்ற நூற்ருண்டின் இறுதிக்குள் உயிர்க்காட்சிச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன. ஆனல் லண்டன், பாரிசு, பிலடெல்பியா போன்ற இடங்களில் இருப்பவைதான் மிகப்பெரியதும் புகழ்பெற்ற உயிரினங்களைக்கொண்டதாகவும் விளங்குகின்றது.

லண்டன், பிலடெல்பியா, ஆம்ஸ்டெர்டாம் போன்ற இடங்களில் உள்ள உயிர்க்காட்சிச் சாலைகளில் விலங்குகளுக்கேற்றஇயற்கைச்சூழ் நிலைகளுக்குத்தக்கவாறு அவைகளுக்கு இருப்பிடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்று உயிர்க்காட்சிசாலை வெறும் பொழுதுபோக்கும் இடமாக மட்டுமல்லாமல் உயிரின நூல் அறிவாராய்ச்சிக்கு பெருந்துணையாக விளங்குகின்றது. மேலை நாடுகளில் உயிர்க்காட்சிச்சாலைகள் அறிவியல் ஆராய்ச்சிக்கூடங்களாகவே காட்சியளிக்கின்றன.

ஒவ்வொரு உயிர்க்காட்சிச்சாலையும் தங்களிடமுள்ள, கிடைக்கக்கூடிய உயிர்வகைகளை பிற நாட்டு உயிர்க்காட்சிச்சாலைகளுக்கு அனுப்பி அதற்குப் பதிலாக பிற நாட்டு உயிர்வகைகளை பெறும் முயற்சியில் ஈடுபடுகின்றன. சில சமயங்களில் மிக அபூர்வமான உயிர்வகைகளுக்காக அதிகமான பணமும் கொடுத்து வாங்கப் படுகின்றன.

உயிர்க்காட்சிச்சாலைகளை நிர்வகிக்க அதிகச் செலவு ஏற்படுகிறதாகையால் அவைகளை நகராட்சி மன்றங்களே பல நாடுகளில், ஏற்று நடத்துகின்றன. மக்கள் உயிர்க்காட்சிச்சாலையைப் பெருமளவிற்குப் பொழுதுபோக்கும் இடமாகக் கருத அங்கு அடிக்கடி புதிய புதிய விலங்குகளும் பறவைகளும் புதிதாகச் சேர்க்கப்படவேண்டும். மக்கள் நன்ருகக் காண்பதற்கு ஏற்றவாறு விலங்குகளின் இருப்பிடம் அமைக்கப்படவேண்டும். சென்ற உலக மகா யுத்தத்தின்போது இங்கிலாந்தில் குண்டுவீச்சுகள் நிகழ்ந்தபோதும்கூட உயிர்க்காட்சிச் சாலைகள் மக்களால் புறக்கணிக்கப்படவில்லை. யுத்தம் ஆரம்பித்து முடிந்தகாலம் வரை லண்டன் உயிர்க்காட்சிச்சாலைக்கு வருகைதந்தவர்கள் சுமார் 65 லட்சம் பேர்கள் என்ருல், உயிர்க்காட்சிச்சாலையின் வளர்ச்சியையும் அங்கு அது எவ்வளவு அவசியமாகக் கருதப் படுகிறது என்பதையும் நாம் உணர்ந்துகொள்ளலாம்.

சென்னை உயிர்க்காட்சிச் சாலை

சென்னை உயிர்க்காட்சிச்சாலை (Madras Zoo) இந்தியத் துணைக்கண்டத்தில் மிகச் சிறந்த ஒன்று என்று பெயரெடுக்காவிட்டாலும், முதன் முதல் தோன்றியது என்ற பெருமைக் குரியதாகும்.

சென்னை உயிர்க் காட்சிச் சாலை 1855 நவம்பர் 23-ம் நாள் முதன்முதல் உருப்பெற்றெழுந்தது. அப்பொழுது குரங்கும் சில காட்டு விலங்குகளும் காட்சியளித்தன. இப்பொழுது பொருட் காட்சிச்சாலை (Museum) இருக்கும் இடத்தையொட்டித்தான் உயிர்க்காட்சிச்சாலை அப்பொழுது நிறுவப்பெற்றிருந்தது. அப்பொழுது அந்த இடத்தைச் சுற்றிலும் வாழ்ந்த மக்கள் உயிர்க்காட்சிச்சாலையிலிருந்த விலங்குகளினால் ஏற்பட்ட தொல்லைகளைப்பற்றி முறையிடவே, 1861-ஆம் ஆண்டில் உயிர்க்காட்சிச்சாலை 'மக்கள் பூங்கா'விற்கு (People's Park) நகர்த்தப்பட்டது. 1866-ஆம் ஆண்டில்தான், சென்னை நகராட்சி அதனை ஏற்று நடத்த முன்வந்தது. அதற்கு முன்பு வரையில் 'பூங்காக்குழு' (Park Committee) ஒன்று அதனைக் கண்காணித்து வந்தது.

உயிர்க்காட்சிச்சாலையை வளர்ச்சியுறச் செய்வதற்குச் சென்னை அரசு அவ்வப்போது உதவி நிதியளித்துவந்தது. உயிர்க்காட்சிச் சாலை சிறுகச் சிறுக வளர்ந்து 1941-ஆம் ஆண்டில் ஒரு நல்ல நிலையை அடைந்தது. இரண்டாம் உலகப் பெரும்போரின் போது சப்பானின் படையெடுப்பும், குண்டுவீச்சும் நிகழுமோ என்ற ஐயுறவு ஏற்பட்டகாலை, 1942 மே 10-ஆம் நாளன்று, கொடிய காட்டு விலங்குகளெல்லாம் சுட்டு வீழ்த்தப்பட்டன. அமைதியான உயிரினங்களெல்லாம் ஈரோட்டிற்கு அழைத்துச்செல்லப்பட்டு, அங்கு வைத்துக் காப்பாற்றப்பட்டன. மீண்டும் 1949-இல் சென்னை உயிர்க்காட்சிச்சாலை மீண்டும் பழைய நல்ல நிலையை எய்தியது. அது நன்னிலை எய்தும்படி பவநகர் மன்னர் பல காட்சியுயிர்களை அப்பொழுது தந்துதவினர்.

சென்னை உயிர்க்காட்சிச்சாலை இப்பொழுது சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருக்கிறது. இப்பொழுது 46 இனங்களைச் சேர்ந்த 203 விலங்குகளும், 45 இனங்களைச் சேர்ந்த 459 பறவைகளும், 17 இனங்களைச் சேர்ந்த 42 ஊர்வனவும், 41 இனங்களைச் சேர்ந்த 156 மீன்களும் சென்னை உயிர்க்காட்சிச் சாலையில் இடம் பெற்றிருக்கின்றன.

சென்னை உயிர்க்காட்சிச்சாலை இத்திங்களில் முதல் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிக்கொண்டிருக்கிறது. அது விரிந்து பரந்து ஓங்கி வளர்ந்து உயர்புகழ் எய்துமாக!

அறிவுப்புதிர்

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் கருத்துக்கள் சரியா, தவறு என்பதற்குத் தனித்தனியே குறித்துக்கொண்டு, உங்கள் விடைகளை 35-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விடைகளோடு ஒப்பிட்டு விளங்கங்களையும் காணவும்.

1. பூமத்திய ரேகைக்கு வடக்கே ஏதேனும் ஓரிடத்திலிருந்து ஒரு ஆகாயவிமானம் புறப்படுகிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த விமானம் நேர் வடக்காகப் பறந்து சரியாக 300-வது மைலில் திரும்பி நேர் கிழக்காகப் பறக்க ஆரம்பித்துப் பின் மறுபடியும் 300 வது மைலில் திரும்பி நேர் தெற்காகப் பறக்க ஆரம்பித்துப் பின் மறுபடியும் 300-வது மைலில் திரும்பி நேர் மேற்காகப் பறக்க ஆரம்பித்து 300 மைல் சென்றால், அந்த விமானம் புறப்பட்ட இடத்திற்கு வந்து சேராது.

சரி...... தவறு......

2. தன்னொளி பரப்பிடும் ஞாயிறு எங்கும் நகராமல் நிலையான ஓரிடத்தில் இருக்கின்றது.

சரி...... தவறு......

3. பூமியைச் சுற்றிக்கொண்டு வரும் திங்கள் தன்னைத்தானேயும் சுற்றிக்கொள்ளச் செய்கிறது.

சரி..... தவறு......

தனயனைக் காணவந்த தந்தை

[எழினி]

அவன் மனதிற்குகந்த மங்கை நல்லாளைத் தன் காதலியாகத் தேர்ந்தெடுக்கிறான். இருவரும் தலைவன் தலைவியர் ஆகின்றனர்; திருமணம் நடந்தேறுகிறது; வாழ்க்கைத் துணைவர்களாக மாறுகின்றனர்.

அவனோ செல்வக்குடியிற் பிறந்த செழுமையாளன்; அவளோ நற்குடியிற் பிறந்த மங்கை நல்லாள். எனவே இல்லற வாழ்வு யாதொரு குறைபாடுமின்றி இனிதே நடந்தேறி வருகின்றது.

இனிய இல்லற வாழ்வுக்கான எல்லா வசதிகளும், வளங்களும் நிரம்பிக்கிடக்கின்றன. அகன்ற பெரிய மாளிகையில்தான் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இட்டவேலையை ஏற்றுச் செய்ய ஏவலாளர்கள் ஏராளமாகக் காத்துக்கிடக்கின்றனர். உற்றாரும், உறவினரும், விருந்தினரும் நாள்தோறும் வந்துவந்து போகின்றனர். வரவேற்பும், விருந்தும், வழியனுப்பும் ஓயாமல் நடந்தேறிக்கொண்டேயிருக்கின்றன. மாளிகை கட்டுக்காவலையுடையதாகையால், காவல்புரிவோர் மாளிகையின் வாயிலில் மணிகட்டிக் காவலின் தன்மையை உணர்த்திக்கொண்டேயிருக்கின்றனர். நிலவளமும், நீர்வளமும், துறைவளமும் ஏராளம். அவ்வளவு செல்வ மிகுதியில் அவ் இள மணமக்களின் இன்பவாழ்வு இனிது நிறைவேறி வருகிறது.

பெரும்பொழுதை மனைவியோடு கொஞ்சுதலிலும், குலாவுதலிலும், சிறு பொழுதை ஆடல்பாடல் போன்ற களியாட்டங்களைக் கண்டுகளிப்பதிலும் தலைவன் செலவிட்டு வருகிறான்.

சிலகாலம் சென்றபிறகு மனைவி கருவுறுகிறாள். கருவுற்றிருக்கும் தன் இளம் மனைவியின் அருகிருந்து அவளுக்கு ஆதரவும், பாதுகாப்பும் தரவேண்டும் என்ற கடமையும், பண்பும் அறியாத தலைவன், அவளைச் சிறுகச் சிறுகப் புறக்கணித்துவிட்டு, ஆடல்-பாடல் புரியும் பரத்தையரிடத்துத் தன் மனதைச் சிறிது சிறிதாகப் பறிகொடுத்துவிடுகிறான். நாளாக நாளாக மனைவியோடு சிறுபொழுதே சேர்ந்திருத்தலும், பரத்தையரின் ஆடல்—பாடல் களியாட்டங்களில் பெரும்பொழுதைச் செலவிடுதலிலும் காலங்கழிக்கத் துவங்குகிறான்.

தலைவனின் நிலைமையையும், அவனது குறைபாட்டையும் நன்கு அறிந்துகொண்ட சில பாணர்கள் அவனைப் பரத்தையரோடு தொடர்புகொள்ளச் செய்ய முயலுகின்றனர். தலைவன் அவர்கள் வீசிய வலையிலே சிக்குகிறான். மதிமயங்கி, அன்பு மனைவியை மறந்து, பரத்தையர் சேரிக்குப் போய்விடுகிறான்.

தலைவன் தீய வழியிற் புகுவதைத் தடுக்க இயலாத தலைவி, ஏக்கத்தோடு வாழ்கிறாள் என்றாலும், இல்லற அறங்களைத் தலைவனுக்குப் பதிலாக இருந்து நல்ல முறையில் நடத்தி வருகிறாள்.

தலைவன் இளைஞனாக இருப்பதாலும், செல்வ மகனாக இருப்பதாலும் கண்ணுமண்ணு தெரியாமல் பணத்தையெல்லாம் பரத்தையர்க்கும், பாணர்க்கும் வாரி இறைத்துக்கொண்டிருக்கிறான். தலைவனிடம் எவ்வளவு பணத்தைக் கரக்க முடியுமோ அவ்வளவு பணத்தைக் கரக்கப் பரத்தையரும், பாணரும் படாதபாடு படுகின்றனர்.

தலைவி கருநிறைவுற்று அழகிய ஆண்மகன் ஒருவனை ஈன்றெடுக்கிறாள். செல்வக்குடிக்கு ஆண்மகன் பிறந்திருப்பது மாளிகையில் வாழ்வோர் அனைவர்க்கும் மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. தாய்க்கும் சேய்க்கும் நீராட்டுவிழா நடத்தவும், பெயரிடுவிழா நடத்தவும் மாளிகையிலுள்ளோர் சீரிய ஏற்பாடுகள் பலவற்றையும் செய்கின்றனர். ஊரார்க்கும், உறவினர்க்கும் அழைப்புகள் விடுக்கின்றனர். மாளிகையின் நடுமுற்றத்திலும், தெருவாயிலிலும் தென்னங் கீற்றினால் பெரும் பந்தல்கள் போடப்பட்டு, நன்கு அழகுபடுத்தப்பட்டிருக்கின்றன. பந்தலின் கீழே வெண்மணல் பரப்பப்பட்டிருக்கிறது. விழாவினை அறிவிக்கும் மணியின் ஓசை மாளிகை வாயிலின்கண்ணே எழும்பியவண்ணம் இருக்கின்றது.

திருந்திய அணிகலன்கள் அணிந்துள்ள நற்பெண்டிர் பலரும் வந்து, தாய்க்கும் சேய்க்கும் வெண்கடுகையும் பசுநெய்யையும் தேய்த்து முழுக்காட்டுவிக்கின்றனர். செவிலி குழந்தைக்குத் தொட்டிலிட்டு, அதில் மெல்லிய மிருதுவான அணையைப் போட்டு, அதன் மீது நறுமணம்மிக்க விரிப்பு விரித்துவைக்கின்றாள். மாலைப்பொழுதில் பெண்டிர் குழந்தைக்குப் புத்தாடை உடுத்தி, நறுமணச் சாந்தம் முதலியன தடவி தொட்டிலில் இடுகின்றனர். பெண்டிர், தலைவனின் தந்தையின் பெயரைக் குழந்தைக்கு வைத்து, அதனை வாழ்த்தி, அதற்குத் தாலாட்டுக்கூறித், தொட்டிலை ஆட்டுகின்றனர். தாயின் மென்மையான உடலுக்கு நெய்யைப் பூசி, அவளை அணிகலன்களால் அழகுபடுத்துகின்றனர், அவள் மகனைப் பெற்றெடுத்த மகிழ்ச்சியோடு உடல் வாட்டத்தின் காரணமாக ஓர்புறம் சோர்ந்து படுத்துக்கொள்கிறாள். விழா நிகழ்ச்சிகள் முடிவுற்று, வந்த விருந்தினர் தத்தம் வீடு ஏகுகின்றனர். விழா ஆரவாரம் மாளிகையில் ஓரளவுக்கு அடங்குகிறது.

• மனைவிக்கு ஆண்குழந்தை பிறந்துள்ள செய்தியும், நீராட்டுவிழா, பெயரிடுவிழா முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்ற செய்தியும் பரத்தையர் சேரியில் இருக்கும் தலைவனின் காதுக்கு எட்டுகின்றன. தனக்கு மகன் பிறந்துள்ளான் என்ற செய்தி கேட்டு அவன் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டதோடு, மகனைக் காணவேண்டும் என்று ஆவல்கொள்கிறான். பரத்தையரினின்றும் எப்படித் தப்பிப் போவது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறான். நடு இரவுக்காலத்தில், எல்லாப் பரத்தையரும் உறங்கிக்கொண்டிருக்கும்போது, அவர்கள் யாரும் அறியாவண்ணம் மெல்ல கிளம்பி தன் மாளிகை நோக்கி விரைந்து செல்கிறான்,

பிறந்த இளமை கலையாத நிலையிலிருக்கும் மகன் மெல்லிய அணையின்மீது உறங்குவதையும், மனைவி ஈன்ற களைப்பால் தன் இரு கண்களையும் மூடிக்கொண்டு உறங்குவதையும் காண்கிறான். பாழும் பரத்தையரிடம் பழகிய அவன் கண்களுக்குத் தலைவி மிக்க அழகான தோற்றமுடையவளாகக் காணப்படுகிறாள். மனைவியையும், மகனையும் அன்பு வழியும் பார்வையால் மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறான். இந்த நிலையில் தோழி விழித்துக்கொண்டு, "யாரது?" என்று அதட்டிக் கேட்கிறாள்.

தலைவன் "நான்தான்......!" என்று தழதழத்த குரலில் விடை பகர்கிறான்.

"உனக்கு வெட்கமில்லை! போ வெளியே! மிக்கக் கவலையாக இப்பொழுது வந்துவிட்டாயா? உனக்கு மனைவியும், மகனும் ஒரு கேடா?" என்று தோழி ஏசுகிறாள்.

தலைவன் "நான் இனிமேல் அத்தகைய தவறு செய்யமாட்டேன். என்னை மன்னித்து விடு!" என்கிறான்.

"இந்த நள்ளிரவிலே ஏன் திருடன் நுழைவதைப்போல் நுழைந்துவந்திருக்கிறாய்?" என்று தோழி கேட்கிறாள்.

"இப்பொழுதுதான் மகன் பிறந்துள்ள செய்தியைக் கேள்வியுற்றேன்" என்கிறான்.

"மகன் பிறந்துள்ளான் என்றவுடன், ஓடி வந்துவிட்டாய் போலும்! இத்தனை நாளும் அவள் இருந்தது உனக்குத் தெரியவில்லையோ?" என்று தோழி அதட்டிக் கேட்கிறாள்.

"இனி இருவரையும் விட்டு அகலமாட்டேன். நீ என்னை நம்பு" என்கிறான்.

இதற்குள் தலைவி விழித்துக்கொண்டு, தலைவனின் தவறுகளையெல்லாம் மறந்து, அவனை விரும்பி ஏற்றுக்கொள்கிறாள்!

∴ ∴ ∴

நற்றிணை 40-ஆம் செய்யுளின் உட்கருத்தே மேலே எடுத்துக் காட்டப்பட்டிருப்பதாகும், இந்தச் செய்யுளை இயற்றியவர் **கோண்மா நெடுங் கோட்டனூர்** என்ற புலவராவார். இவரைப்பற்றிய விரிவான குறிப்பு ஒன்றும் தெரியவில்லை. இதைத்தவிர இவரது பாடல் வேறு எதுவும் கிடைத்திலது. இப்படிப்பட்ட அழகான செய்யுளை இயற்றியவர் இதனைப்போன்று இன்னமும் எத்துணையோ பாடியிருக்கக்கூடும் என்று எண்ணி, அவை கிடைக்காமல் ஏங்கவேண்டியிருக்கிறது.

∴ ∴ ∴

நெடுநா ஒள்மணி கடிமனை இரட்டக்

குரையிலைப் போகிய விரவுமணல் பந்தர்ப்

பெரும்பாண் காவல் பூண்டென ஒருசார்த்
திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப
வெறியுற விரிந்த அறுவை மெல்லணைப்
புனிறுநாறு செவிலியோடு புதல்வன் துஞ்ச
ஐயவி அணிந்த நெய்யாட்(டு) ஈரணிப்
பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை ஈரிமை பொருந்த
நள்ளென் கங்குல் கள்வன் போல
அகன்துறை ஊரனும் வந்தனன்
சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே.

[நற்றிணை—40]

[பொழிப்புரை : காவலையுடைய மாளிகையிடத்து நெடிய நாக்கையுடைய ஒள்ளிய மணி ஒலிக்க, இரைச்சல்போடும் தென்னங்கீற்றால் போடப்பட்டு அழகு செய்யப்பட்ட மணல் பரப்பிய பந்தலின்கண்ணே, முன்பு பரத்தை வீட்டிற்குச் சென்றபோது பெரிய பாணர் தலைவனைச் சூழ்ந்து காவலை மேற்கொண்டதுபோலத், திருந்திய அணிகலன்கள் அணிந்த பெண்டிர் இப்பொழுது நல்லவிழாவின்பொருட்டு சூழ்ந்துநிற்க, நறுமணமிக்க விரிப்பு விரித்த மெல்லிய அணையின்மீது செவிலியுடனே ஈன்ற அணுமை விளங்கிய மகன் தூங்க, வெண்கடுகையப்பிய எண்ணெய்தேய்த்து நீராட்டியதனால் ஈரமுடைய அணிகலன்களை அணிந்த குளிர்ந்த நெய்பூசிய மிக்க மென்மையாகிய உடம்பினையுடைய அழகு விளங்கும் மனைவிதான் தன் இரண்டு இமைகளும் ஒன்றோடொன்று பொருந்த உறங்க, அகன்ற நீர்த்துறையையுடைய ஊரனும் சிறந்த தந்தையின் பெயரனாகிய தன் மைந்தன் பிறந்ததனால், நள்ளிரவிலே கள்வனைப்போல வந்துற்றான்.

கடி - காவல் ; இரட்ட - ஒலிக்க ; குரையிலை - இரைச்சலிடும் தென்னங்கீற்று ; விரிச்சி - நிமித்தம், பொருட்டு ; அறுவை - ஆடை ; புனிறு - ஈன்றதன் அணிமை ; ஐயவி - வெண்கடுகு.]

பரத்தையர் சேரியில் காமமயக்கங்கொண்டு கண்டபடி திரிந்துகொண்டிருந்த தலைவன் மகன்பிறந்த செய்தியறிந்து இல்லம் தேடிவந்தான் என்பதிலிருந்து மகவு, தந்தையின் உள்ளத்தைக் கவர்வதில் எவ்வளவு வலியுடையதாக விளங்குகிறது என்பதை யறிந்துகொள்ளலாம். தலைவன் தலைவியரின் மகிழ்ச்சியைப் பெருக்குவதற்கும், நீங்காப் பிணைப்பை ஏற்படுத்துவதற்கும் பிள்ளைப்பேறு எவ்வளவு இன்றியமையாததாக வேண்டப்படுகிறது என்பதை இச்செய்யுளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பெரும் மாளிகைகளின் வாயிலில் மணி கட்டி ஒலிக்கச் செய்தலும், வீடுகளில் விழா ஏற்பட்டால் முற்றத்தில் கீற்றுப் பந்தல் போட்டு வெண்மணல் பரப்புதலும், விழாக் காலங்களில் பெண்டிர் முக்கியப் பங்குகொள்ளுதலும், நறுமணம் தெளிக்கப்பெற்ற ஆடையை மெத்தையின்மீது விரித்து அதில் குழந்தையைப் படுக்கவைத்தலும், குழந்தையைச் செவிலி பாதுகாத்துவருதலும், வெண்கடுகையும் பசுநெய்யையும் தேய்த்துத் தாயை முழுக்காட்டுதலும், தாத்தாவின் பெயரைப் பேரனுக்கு இடுதலும் ஆன பழக்கவழக்கங்கள் பண்டைத் தமிழகத்தில் விளங்கிவந்தமை இச்செய்யுளால் இனிது அறியப்படும்.

சிறுகதை

பாசம்

சதானந்த சாமியார் வழக்கத்திற்கு மாருக மிகுந்த வருத்தத்துடன் காணப்பட்டார். எப்பொழுதும் புன்சிரிப்பு தவழ்ந்துகொண்டிருக்கும் அவர் முகத்தில் கவலை கப்பிக்கொண்டிருந்தது. எதையோ ஒன்றை இழந்துவிட்டவர்போல் அவர் கண்களில் ஏக்கம் பிரதிபலித்துக்கொண்டிருந்தது. இதை யாராகிலும் கண்டுகொள்வார்களோ என்ற பயமும் அதை எப்படியாவது சமாளித்து மறைத்துக்கொள்ளவேண்டுமென்ற எண்ணமும் அவருக்கு இருந்தது.

சதானந்த சாமியார் அந்தப் பக்கத்திலுள்ள பத்துப் பதினைந்து கிராமங்களுக்கு நன்கு அறிமுகமானவர். அவர் தேவாங்குடிக்கு வந்து சுமார் முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாகிறது. தேவாங்குடியிலுள்ள பெரியதனக்காரர் சுந்தரேச முதலியாருக்கு சாமியாரிடத்திலே ஆரம்பமுதலே நட்பு இருந்துவந்த காரணத்தினுல், அந்த ஊரிலே அவருக்கென்று ஒரு தென்னந்தோட்டமும், அதிலே ஒரு சிறிய மடமும் சாமியாருக்குக் கொடுத்திருந்தார்.

சாமியாருடைய பூர்வீகத்தைப் பற்றி, அந்த ஊரிலுள்ள யாருக்கும் அதிகம் தெரியாது. அவருடன் மிகவும் நெருங்கிப் பழகிவந்த சுந்தரேச முதலியாருக்கேகூட அவரைப்பற்றி முழு விவரமும் தெரியாது. ஆனுல் அவர் மலையாளத்தைச் சேர்ந்த ஏதோ ஒரு கிராமத்தில் பிறந்தவர் என்பதும், பெரிய குடும்பத்தில் பிறந்து ஏதோ குடும்பத் தகராரின் காரணமாக சின்ன வயதில் வீட்டைவிட்டு வெளியேறிவந்துவிட்டாரென்பதும், ஒருசிலருக்குத் தெரிந்த விவரமாக இருந்துவந்தது.

வீட்டைவிட்டு வெளியேறியபிறகு பலவருடங்கள் வீட்டுடன் தொடர்பில்லாமல், பல ஊர்களிலும் சுற்றியலைந்து கடைசியாக தேவாங்குடிக்கு வந்துசேர்ந்தார். வாழ்க்கையில், அன்ருடப் பொழுதைக் கழிப்பதற்கு வழி தேட அலைந்த அவருக்கு வேதாந்தம் வெகு சுலபத்தில் வந்துவிட்டது. காவியுடை, வெள்ளை உடையைக் காட்டிலும் அழுக்கு தாங்கக்கூடும் என்பது அவர்கண்டிருந்த உண்மை, எனவே அதை அவர் தேர்ந்தெடுத்திருந்தார். தாடியும் மீசையும் சடையும் முடியும் இயற்கையாக வளர்வதை தடுப்பதற்கும் பொருட்செலவு செய்யவேண்டியிருக்கும் என்பதற்காகவே அதை அதன் போக்கில் விட்டுவிட்டிருந்தார். விரக்தியால் ஏற்பட்ட வேதாந்தம், வேறு நிலையில்லாததால், தானே ஏற்படுத்திக்கொண்டிருந்த கோலம் இவை பிறருக்கு அவரை ஒரு சாமியாராக அறிமுகப்படுத்திவைத்ததை அவரும் தடுக்க விரும்பவில்லை, எப்படியோ ஒன்று தன் வாழ்க்கை நகர்ந்தால் போதும் என்று அவரும் எண்ணியிருந்தார்.

தேவாங்குடிக்கு ஒரு திருவிழாவின்போது வந்திருந்த சதானந்தர், சுந்தரேச முதலியார் வீட்டில் சாப்பாடு சாப்பிட்டபிறகு பேசிக்கொண்டிருந்த வேதாந்தப் பேச்சில் முதலியார் மயங்கிவிட்டார்; எனவேதான், சாமியாரை அந்த ஊரிலேயே தங்கும்படி சொல்லிவிட்டார் என்று அந்த ஊரார் சொல்லிக்கொண்டார்கள். நாடோடியாக திரிவதைவிட இந்த வாழ்க்கை மேலானதுதான் என்று சதானந்தரும், முதலியாரின் எண்ணத்திற்கு இசைந்தார். இதன் பலனுக சாமியாருக்கு ஒரு சிறு தென்னந்தோட்டமும் அந்தத் தோட்டத்தினுள்ளே ஒரு சிறு மடமும் கிடைத்தது. அந்தத் தென்னந்தோட்டம் ஒரு ஆற்றையொட்டி அமைந்திருந்தது. பெரிய வாய்க்கால் ஒன்று அந்தத் தோட்டத்தில் புகுந்து மடத்தை சுழித்துக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தது. ஊரிலுள்ளவர்கள் வெய்யில் வேளையில், குளிப்பதற்கு அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்ததில் வியப்பொன்றுமில்லை. குளித்துவிட்டுப் போகிறவர்கள் சாமியாரிடம் யாரும் பேசாமல் போவதில்லை. சிலருக்குத் திருநீறு முதலியன பெற்றுப்போவதென்பது தினசரி வழக்கமாகவுமிருந்தது.

ஆரம்பத்தில் தட்டுத் தடுமாறி தமிழ் பேசிவந்த சாமியார், நாளாவட்டத்தில் தமிழில்

நன்றாகப் பேசவும், படிக்கவும் எழுதவும் தேர்ந்தவரானார். அந்த வட்டாரத்தில் திருவிழா நாட்களில் நடக்கிற சமயச் சொற்பொழிவுகள் முதல்நாள் துவக்கச் சொற்பொழிவு சதானந்தருடையது என்பது நிச்சயமாகிவிட்டது. அக்கம்பக்கத்திலுள்ள பெரிய புள்ளிகளின் வீடுகளில் நடக்கும் நல்லது கெட்டது இவைகளில் சாமியாரை நிச்சயம் காணலாம். யாரிடமும் குழந்தைபோல் பழகும் சுபாவமும், அவரவர்களின் மனப்போக்கிற்கு ஏற்றவாறு பேசி அவர்களைத் திருப்திப்படுத்திவருவதும், கவலையோடு இருப்பவர்களுக்கு உற்சாகமூட்டி தைரியப்படுத்துவது ஆகியவை அவரின் அன்றாட நிகழ்ச்சியாக இருந்தமையால், அவர் அந்த வட்டாரத்திலுள்ள அனைவரின் அன்பையும் பெற்றிருந்தார்.

இளம்வயதிலேயே வீட்டைவிட்டு வெளியேறிய அவர் திருமணத்தைப் பற்றிக் கனவிலும் கருதவில்லை; இதுவரையிலும் 'அந்த மாதிரி' கெட்ட பெயர் அவருக்கு எதுவும் கிடையாது என்று அந்த ஊர் மக்கள் சொல்லிக்கொண்டார்கள், இந்த நல்ல பெயரோடேயே அவர் முப்பது வருடங்களை அந்த ஊரில் கழித்திருந்தார். அவருக்கு அப்பொழுது வயது அறுபத்திமூன்று ஆகியிருந்தது. மூன்று வருடங்களுக்கு முன்புதான் அவருடைய அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா முதலியாரின் முயற்சியால் வெகு விமரிசையாக நடைபெற்றது; பத்திரிகைகளிலெல்லாம் கூட விழாபற்றிய விவரம் படத்துடன் வெளியாகியிருந்தது.

சாமியாரை ஒருநாளைக்குப் பார்க்கவில்லையென்றாலும் தனக்கு தூக்கமே வருவதில்லை என்று சுந்தரேச முதலியார் அனைவரிடமும் சொல்லிக்கொள்வதுண்டு. சாமியார் பாவம் எங்கோ பிறந்து எங்கோவளர்ந்து, எப்படியோ இங்கு வந்து சேர்ந்திருக்கிறார், அவருக்கு நம்மைவிட யாரிருக்கிறார்கள் என்ற அவருடைய பரிதாபத்தை ஆமோதிக்க, அந்த ஊரில் ஏராளமானபேர்கள் இருந்தார்கள்.

அன்று காலையிலிருந்தே சுந்தரேச முதலியார், வீட்டில் வேலை அதிகமிருந்ததின் காரணமாக மடத்துப்பக்கம் போகவில்லை. மடத்துப்பக்கம் போய்வந்த இரண்டொருவரும் சாமியார் ஏதோ கவலையாக இருப்பதாக முதலியாரிடம் சொன்னார்கள். சுந்தரேச முதலியாருக்கும் அது ஆச்சரியமாக இருந்தது. மாலை ஐந்துமணி இருக்கும், முதலியார் மடத்துப்பக்கம் போய்வரலாமென்று புறப்பட்டு சென்றார். மடத்தின் கதவு வழக்கத்திற்கு மாறாகப் பூட்டப்பட்டிருந்தது. சாமியார் வெளியூர் செல்வதாக இருந்தாலும்கூட மடம் பூட்டப்படுவதில்லை. யாராவது அந்த மடத்திற்கு காவலிருப்பது வழக்கம். சாமியாரும் இப்படி முதலியாரிடம்கூட சொல்லாமல் எங்கும் போனதில்லை. இரவு ஏழுமணி வரையிலும் காத்திருந்த முதலியாருக்கு, சாமியார் வராமை ஒருபக்கம் இனம்புரியாத ஒரு பயத்தையும், ஒருபக்கம் பெரிய ஆச்சரியத்தையும் கொடுத்துக்கொண்டிருந்தது. நாட்கள் ஒன்று இரண்டு என்று நகரத் தொடங்கின. இதற்குள் ஊர் முழுதும் சாமியாரைப் பற்றிப் பலவிதமாகப் பேசத்தொடங்கிவிட்டார்கள். சாமியார் திரும்பி வருவது சந்தேகந்தான் என்பது மெல்ல மெல்ல நிச்சயமாகிக்கொண்டிருந்தது. இதற்குள் அக்கம்பக்கத்திலுள்ள ஊர்களிலெல்லாம் அவரைத் தேடிப்பார்த்து, எந்த வித முடிவுக்கும் வரமுடியாமல் எல்லோரும் திகைத்துக்கொண்டிருந்தனர்.

ஐந்தாம் நாள் காலையில் மடத்தின் கதவு திறந்திருந்ததைப் பார்த்த ஒருவர் ஓடோடியும் சென்று மடத்தினுள் பார்த்தார். உள்ளே சாமியார் சாய்வு நாற்காலியில் படுத்தவண்ணம் கண்களை மூடியபடி இருந்தார். இதைப் பார்த்த மனிதர் ஓடிவந்து சாமியார் வந்துவிட்ட செய்தியை முதலியாரிடம் சொன்னதோடு, ஊர்முழுவதும் சொல்லிவிட்டார். மடத்தில் பெருங் கூட்டம் கூடிவிட்டது. எல்லோரும் ஆச்சரியமாக சாமியாரைப் பார்த்துக்கொண்டிருந்தனர். அவர் மூடிய கண்களைத் திறக்கவேயில்லை. எல்லாமே பெரிய புதிராக இருந்தது. இதற்குள் சுந்தரேச முதலியார் வருவதைக் கண்ட ஜனங்கள் ஒதுங்கி அவருக்கு வழிவிட்டார்கள். உள்ளே சென்ற சுந்தரேச முதலியார் சாமியாரின் அருகில் நின்று "சாமி சாமி" என்றார். அதற்கும் பதிலில்லை. சுந்தரேச முதலியார் சுற்றியிருந்த ஜனங்களைப் பார்த்து சாமியார் நிஷ்டையிலிருக்கிறார், நீங்களெல்லாம் போகலாம், யாரும் அவருக்குத் தொந்தரவு கொடுக்காதீர்கள்" என்றார். முதலியாரும், வேறு இருவரும் தவிர அனைவரும் திரும்பிவிட்டனர். மணி பன்னிரெண்டை நெருங்கிக்கொண்டிருந்தது. சாமியார் ஒருமுறைக் கண்களைத் திறந்து பார்த்தார். எதிரே முதலியாரும் மற்ற இருவரும் ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தனர். அவர்களையும் கைச்சாடைகாட்டி போகும்படிச் சொன்னார். அவர்களும் உடனே அங்கிருந்து சென்றுவிட்டனர்.

அன்று மாலை 6 மணி இருக்கும். முதலியார்

மட்டும் தனியாக மடத்தைநோக்கி வந்து கொண்டிருந்தார். சாமியார் மடத்தின் வெளியேயிருந்த கம்பம் ஒன்றில் சாய்ந்து, வானவெளியைப்பார்த்தபடி யோசனையில் ஆழ்ந்திருந்தார். முதலியார் நெருங்கிவந்து 'சாமி' என்றதும் "முதலியாரா வரணும்" என்ருர். முதலியாருக்கு ஆச்சரியத்தைக் காட்டிலும் மகிழ்ச்சி அதிகமாயிற்று. "என்ன சாமி இப்படி திடீர்னு மாறுதல், இத்தனை நாளா எங்கே போயிருந்திங்க? எல்லாமே ஒரே குழப்பமாயிடுத்தே" என்று சொல்லிக் கொண்டே வந்த முதலியாரின் குரல் கம்மியது நா தழுத்தது. சாமியாரின் கண்களில் நீர் சுரந்தது. இது சுந்தரேசமுதலியார் பார்த்தறியாத ஒரு காட்சி. எனவே அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. "நான் என்னத்தைச் சொல்ல" என்று சாமியார் துவக்கி நிறுத்தினுர். முதலியாருக்குத் தூக்கி வாரிப்போட்டது. "என்ன சாமி நடந்தது! நான் தெரிஞ்சுக்கக் கூடாதா?" என்ருர் முதலியார். "எனக்கே வெட்கமாக இருக்கிறது" சாமியார் தொடர்ந்தார். முதலியாருக்குப் பயித்தியம் பிடித்து விடும்போலாகிவிட்டது, அதற்குள் அவர் என்னவெல்லாமோ பயங்கரக் கற்பனைகளையெல்லாம் செய்ய ஆரம்பித்துவிட்டார். என்னதான் என்று தெரிந்துகொள்ளவேண்டுமென்ற ஆர்வம் அவர் கண்களில் மிளிர்ந்து கொண்டிருந்தது.

"செல்லத்தை, தெரியுமே முதலியாரே உமக்கு" என்று சாமியார் சொல்ல, "போன திங்கட்கிழமை செத்துப்போனுளே கிழவி, அவள் தானே?" என்ருர்.

"ஆமாம் அவள்தான். நீர்தானே நமது மடத்திற்கு அவளை வேலைக்கு அமர்த்தினீர்" என்ருர் சாமியார்.

"அவளுக்கு என்ன, அவள்தான் செத்துப் போனுளே" என்ருர் முதலியார்.

"அதனுல் ஏற்பட்டதுதான் இதெல்லாம்" என்ருர் சாமியார்.

"ஒன்றும் புரியவில்லையே சாமி" என்று முதலியார் கேட்டார்.

"நான் சொன்னுலும் யாரும் நம்பமாட்டார்கள், எனக்கேகூட விசித்திரமாக இருக்கிறது, இருந்தாலும் என் மனதிலுள்ளதை உங்களிடம் சொல்லாமல் யாரிடம் சொல்லப்போகிறேன் முதலியார்" என்று சாமியார் சொல்ல ஆரம்பித்தார். "செல்லம்மாள் பாவம், மிகவும் நல்லவள், அவளுடைய புருஷன் அவளை அனுதையாக விட்டுவிட்டு இறந்துபோனுன். அவளுக்கு பிறந்த ஒரே மகனும் இறந்துவிட்டான். திக்கற்ற அனுதையாக இருந்த அவளை நீங்கள்தான் மடத்து வேலை செய்ய ஏற்பாடு செய்தீர்கள். சென்ற முப்பது வருஷங்களாக அவள் மடத்தில் வேலை செய்துவந்திருக்கிருள். மழையிலும் குளிரிலும் பாவம் அந்த தள்ளாத வயதுக்காரி இத்தனை ஆண்டுகளும் மடத்தில் வேலை செய்துவந்ததை என்னுல் மறக்கவே முடியாது. எனக்கு பற்று பாசம் எல்லாம் எதுவுமே இல்லை. ஆனுல் அந்த செல்லம்மாள், என் வாழ்க்கையில் மிகத் தொடர்புடையவள் போல் ஆகிவிட்டாள். தினந்தவருமல் அவள் மடத்து வேலைக்கு வருவதும் போவதும் பிரிக்கமுடியாத ஒன்ருகிவிட்டது. ஒருநாள் அவள் வரவில்லையென்ருலும் மடம் எதையோ இழந்துவிட்டதுபோலாகிவிடும்" என்று சொல்லிக்கொண்டே வந்தவர், தன் கண்களில் வழிந்துகொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டார். "போனவாரம் முதல் அவளுக்குக் காய்ச்சல் என்றவுடன் என் மனம் நிம்மதிப்படவில்லை. காய்ச்சல் அதிகமாக இருக்கிறது என்று கேள்விப்பட்டதும் என் மனம் படாத பாடுபட்டது. அவளைப் போய்ப் பார்த்துவரவும் எனக்குத் துணிவு வரவில்லை. பற்றற்ற சாமியாருக்கு இதெல்லாம் ஏன் என்பார்களே என்று நான் போகவில்லை, அவள் இறந்த செய்தி என்னை அப்படியே உலுக்கிவிட்டது. எதையோ இழக்கக்கூடாத ஒன்றை, இழந்துவிட்டது போன்ற ஓர் உணர்ச்சி என்னை ஆட்கொண்டுவிட்டது. அதை நான் எவ்வளவு மறைக்க முயன்றேனே அதைவிட அதிகமாக என்னை அது காட்டிக் கொடுத்துவிடும்போலிருந்தது. உள்ளத்தில் பொங்கிவந்த துக்கத்தை என்னுல் அடக்க முடியவில்லை. கண்களில் என்னையறியாமல் கண்ணீர் சுரந்துகொண்டிருந்தது. இந்தவிசித்திரமான வேதனையைப் பிறர் பார்த்துவிடக் கூடாதென்று நான் முயற்சித்தேன், முடியவில்லை. வெட்கம் என்னைக் குடைந்தது. எங்காவது என் துக்கம் தணியும்வரை போய்விடுவதுதான் நல்லதென்று நான் யாரிடமும் சொல்லாமல் புறப்பட்டுவிட்டேன். இன்னும் என் மனம் ஒருநிலைகொள்ளவில்லை. இதுதான் விஷயம்" என்று முடித்தார் சாமியார்.

சுந்தரேச முதலிமாருக்கு சாமியாரின் சங்கடமான நிலைமை புரிந்துவிட்டது, என்ருலும் சாமியாருக்குக் கூடவா இப்படி ஒரு பாசம் ஏற்படும் என்று ஆச்சர்யமாக இருந்தது.

"உங்களுக்கே இந்தப் பாசம் என்பது இப்படி இருக்குமானுல் நாங்களெல்லாம் என்ன செய்வது சாமி" என்ருர் முதலியார்.

"எனக்கே புரியவில்லையே, முதலியார்" என்று சுருக்கமாக பதிலளித்தார் சாமியார்.

"பாசத்தை அறுத்துவிடு என்று லேசாகச் சொல்லிவருகிறீர்கள், நீங்களேகூட எத்தனையோ முறை பிரசங்கம் செய்திருக்கிறீர்கள். எந்தத்தொடர்புமில்லாத செல்லம்மாள் நினைவே உங்களை இப்படி ஆக்கிவிட்டதென்றால், எல்லாத் தொடர்புமுள்ள குடும்ப பாசத்தை எப்படிசாமி நீக்குவது" என்றார் முதலியார் பெரிய ஆயாசத்துடன்.

சாமியார் பதில் ஒன்றும் பேசவில்லை. தலை குனிந்தவண்ணம் தரையை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார்.

"எல்லாமே வேடிக்கையாத்தான் இருக்கு சாமியாருக்கே இப்படி வந்துடிச்சே" என்றார் முதலியார் கேலி தொனிக்க.

"முதலியார் நான் இன்றைக்கு உங்களிடம் மனந்திறந்து எல்லாவற்றையுமே பேசிவிட நினைக்கிறேன். நீங்கள் பிறகு என்னைப்பற்றி எப்படி எண்ணிக்கொண்டாலும் சரி" என்று சாமியார் ஆரம்பித்தார்.

"நான் என்னுடைய பதினேழாவது வயதில், என்னுடைய சிற்றன்னையின் கொடுமை தாளாமல் வீட்டைவிட்டு வெளியேறினேன், என் தகப்பனார் என் சிற்றன்னையின் கைப்பாவையாக இருந்ததால் என்னைப்பற்றி, நான் வீட்டைவிட்டு வெளியேறிய பிறகும் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. எனக்கு உலகத்தில் எல்லாமே வெறுப்பளிப்பதுபோல் தோன்றியது. உற்றார் உறவினர் யாருமே இல்லாத ஊர்களில், பலநாட்கள் கையில் காசில்லாமலும், ஒருவேளை இருவேளை பட்டினி கிடந்தும் என் காலத்தைக் கழித்துவந்தேன். வாழ்க்கையில் நான் அனுபவித்த கஷ்டங்களுக்கு எந்தவகையான விடிவும் கிடைப்பதாகத் தெரியாத நிலையில்தான் நான் முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் இந்த ஊருக்கு வந்தேன். திருவிழாக் காலங்களில் சாப்பாடு போட்டுவருவதாக உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டவுடனே உங்கள் வீடுநோக்கி வந்தேன். நீங்களும் என்னுடைய கோலத்தைப் பார்த்து எனக்கு அளவுக்கு மீறின மதிப்பு கொடுத்து என்னை உபசரித்தீர்கள், என்னுடைய வேதாந்தப்பேச்சில் நீங்கள் லயித்துவிட்டீர்கள் என்பதை நான் அப்பொழுதே புரிந்து கொண்டேன். வெறும் ஓடு ஏந்திப் பிச்சை எடுப்பதைக்காட்டிலும், இப்படி காவியும், தாடியுமாகத் திரிவதில் கஷ்டம் அதிகம் இல்லை என்பது நான் வாழ்க்கையில் கண்டறிந்த உண்மை. எனவே நான் காவியும் தாடியுமாகக் காலத்தைக் கழித்துவந்தேன். நீங்கள் என்னை வெகு அதிகமாக மதிப்பிட்டு ஒரு தோட்டமும் அதில் மடமும் கட்டித்தர இசைந்ததை நான் மறுக்கவிரும்பாமல் ஏற்றுக்கொண்டேன், நம்முடைய வாழ்க்கையில் இனி கொஞ்சகாலமாவது சுகமாகக் கழிக்கலாம் என்ற நம்பிக்கை எனக்கு வளர்ந்தது. என்னை அனைவரும் உங்களைப்போலவே, அதிக மதிப்பிட்டு உபசரித்தவுடன் நான் அதற்குத் தக்கபடி நடிக்க ஆரம்பித்தேன். எல்லாவற்றையும் வெறுத்தவன்போலப் பேசிவந்தேன். உலகத்திலுள்ள பொருள்கள் அத்தனையையும் அலட்சியப்படுத்துவது போல் பாவனை செய்தேன். ஆனால் என் உள்ளம் மட்டும் எந்த சுகத்தையும் இழந்துவிட விரும்பவில்லை. அதோடு மட்டுமல்ல, கூடுமானவரை சுகத்தைத் தேடிப் பெற்றுக் கொள்ளவும் நான் பின்வாங்கவில்லை. ஆனால் ஒரு அச்சம் மட்டும் என் உள்ளத்தில் என்றும் இருந்தது. என்றாவது ஒருநாள் என்னுடைய உண்மையான உள்ளம் உலகிற்குத் தெரிந்து விடுமே என்பதுதான். மறுபடியும் காவியும் தாடியும் நம்மைக் காப்பாற்றும் என்று என் மனதை நான் திடப்படுத்திக்கொள்வேன், எப்படியோ ஒருவழியாக இதுவரை காலங் கடத்திவந்த என்னை செல்லம்மாளின் நினைவு காட்டிக்கொடுத்தேவிட்டது" என்று சொல்லி முடிப்பதற்குள் அவர் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்து கண்களைத்துடைத்துக்கொண்டு "இவ்வளவுதான்" என்றார்.

"அதற்கென்ன, பரவாயில்லை, நான் தவறாக நினைத்துக்கொண்டிருந்தது, உங்கள் தவறல்லவே" என்றார் முதலியார்.

"என்னை ரொம்பவும் மன்னிக்கணும் முதலியார், இதை நீங்கள் வெளியில் யாரிடமும் சொல்லவேண்டாம்" என்றார் சாமியார்.

"உம்முடைய, வேடத்திற்கு மதிப்பு தரவில்லையென்றாலும், உம்மோடு இத்தனைநாள் பழகிய பாசத்திற்காவது நான் உம்மைக் காட்டிக்கொடுககமாட்டேன்" என்றார் முதலியார்.

சாமியார், முதலியாரின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "உங்களுடைய பெருந்தன்மை யாருக்கும் வராது" என்றார், வரட்டுப் புன்னகையுடன்.

"சரி நான் வரேன். நாழியாகிறது" என்று சொல்லிவிட்டு முதலியார் புறப்பட்டார். அன்றிலிருந்து முதலியார் மடத்துப் பக்கம் அதிகம் போவதில்லை. மற்றவர்கள் மட்டும் வழக்கம்போல் போய்வந்துகொண்டிருந்தார்கள்.

—விந்தியவரம்பன்.

சிலந்திக்கூடு

[இரா. செழியன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இன் : பார்த்தீர்களா? நான் சொன்னபடியே ஆகிவிட்டது! எப்பொழுதும் பெரிய இடத்தில் திருட்டுப்போகிறதென்றால், அது வேறெங்கும் போய்விடாது. வீட்டில் வேலை செய்கிறவர்கள்தான் எடுத்திருக்கணும், திருட்டு எப்படிப் போயிருக்குது என்றுகூட என்னால் சொல்லமுடியும். இந்த ஜன்னல் வழியாக அவன் உள்ளே வந்திருக்கவேண்டும். இதோ! ஜன்னல் மேல் காலடி மண் இருக்கிறது. (ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்து) கீழே தண்ணீர் பட்டிருப்பதால், காலடி நன்றாகத் தெரிகிறது. போர் டொன்டி ஒன்! போய் அதை அளவெடுத்துக்கொண்டு வா!

[கான்ஸ்டேபிள் போகிறான். ஏழுமலை வேலுவை அழைத்துக்கொண்டு வருகிறான். வேலு மயக்க நிலையில் இருக்கிறான்.]

இன் : இந்தக் கடியாரத்தை எப்படிடா எடுத்தே?

வேலு : (தூக்க கலக்கத்தில்) எதைங்க!

ஏழு : (வேலுவை நிறுத்தி) ஆடாம நின்று கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு!

இன் : சரியான திருட்டுப் பையல்தான்! டேய்! இந்தக் கடியாரத்தை எப்படி எடுத்தே?

வேலு : நான் எடுக்கவேயில்லிங்க!

இன் : இப்படி கேட்டா வராது, ஸ்டேஷனுக்கு அழைச்சுகிட்டுப்போய், விலங்கை மாட்டி கூண்டில் நிறுத்தினா, இந்தத் திருட்டு மட்டுமல்ல, இதற்கு முன் நடந்த திருட்டெல்லாம் வெளிவந்துவிடும்.

[கான்ஸ்டேபிள் ஒரு பேப்பருடன் வருகிறான்.]

கான் : மண்ணில் இருந்த காலடி அளவை அப்படியே எடுத்துவந்துவிட்டேனுங்க!

இன் : சரி, இவன் கால் அளவை இப்போ எடு!

திவா : இன்ஸ்பெக்டர்! அவன் முதுகு அளவை எடுக்கிறதை விட்டுவிட்டு, கால் அளவை, கை அளவை எடுக்கச் சொல்றீங்க!

கான் : (கால் அளவை மற்றொரு பேப்பரில் எடுத்து, இரண்டு அளவையும் இன்ஸ்பெக்டரிடம கொடுத்து) சந்தேகமேயில்லிங்க! இவன்தான் கடியாரத்தை எடுத்துவிட்டு, ஜன்னல் வழியாக வெளியே குதிச்சு பொய்விட்டான்.

இன் : டிரைவர்! ராத்திரி எத்தனை மணிக்கு வீட்டுக்குள் புகுந்தே, எதையெதை எடுத்தே, என்ன நடந்தது, மறைக்காம சொல்லிடு!

வேலு : ராத்திரி என்ன நடந்ததுன்னு எனக்கு ஞாபகமே இல்லிங்க!

இன் : என்ன, இவன் பேசினா ஒரே நாத்தம் அடிக்குது! கான்ஸ்டேபிள்! நல்லாப் பாரு!

கான் : (வேலுவின் முகவாயைப் பிடித்து) இந்தா, டிரைவர்! கொஞ்சம் ஊது! ஆ! நல்லா குடிச்சிருக்காங்க!

இன் : திருட்டுக் குற்றத்தோடே, மது விலக்கை மீறின குற்றமும்!

திவா : இவ்வளவு நாளும் தெரியாது, இவன் குடிகாரன்னு! இவனை நம்பி வேலைக்கு வைச்சா, இவன் குடித்துட்டு, ராத்திரியில் வீடுபுகுந்து திருடுறான்!

இன் : டிரைவர்! உனக்கு எங்கே கிடைச்சுது அந்த சாராயம்!

வேலு : (சிறிது விழித்து) சின்ன எசமான் தாங்க கொடுத்தாரு!

திவா : பார்த்தீங்களா இன்ஸ்பெக்டர்! எவ்வளவுபெரிய பொய்யைச் சொல்லிட்டான்னு! திருட்டு, குடி, இப்போ பொய்! இவனை நம்பவே முடியாது!

ஏழு : இருங்க எசமான்! நான் அவனைக் கேள்விகேட்டுப் பார்க்கிறேன்! டேய்! வேலு! நீ எத்தனை மணிக்குக் குடிச்சே? இரண்டு மணிக்கா ஒருமணிக்கா?

வேலு : ஒருமணிக்கு! (எல்லாரும் திருப்தியடைகிருர்கள்)

ஏழு : எத்தனை பாட்டில் குடிச்சே? ஒரு பாட்டிலா, இரண்டு பாட்டிலா?

[வேலு கையைப் பார்த்து விழிக்கிருன்.]

ஏழு : (வேலுவின் கைவிரல்களைச் சுட்டிக் காட்டி) பார்த்தீங்களா? ஐந்து பாட்டில் அவனுக்குக் கிடைச்சிருக்கு?

இன் : கடியாரம் மாத்திரம் திருடினியா? வேறு ஏதாவது எடுத்தியா? உன்னுேட வேறு யார் இருந்தது?

வேலு : சின்ன எசமான்தான் இருந்தார்! நான் மாட்டேன்னு சொன்னேன்! அவர்தான் கட்டாயப்படுத்திக் கொடுத்தாரு, அவரும்கூட.........

திவா : (இடைமறுத்து) உன்னைப்பத்திச் சொல்லுடா, மற்றவங்களைப்பத்தி உனக்கென்னடா வந்துது?

ஏழு : பொய் சொன்னுலும், பொருந்தச்சொல்லுடா! சின்ன எசமானும், இவனுேட சேர்ந்து, திருடவந்ததாக, அதுவும் அவரோட கடியாரத்தைன்னு, யார் நம்புவா? குடிமயக்கத்தில் ஏதேதோ உளருகிருன்!

இன் : கான்ஸ்டேபிள்! ஆஸ்பத்திரிக்கு அழைத்துக்கொண்டுபோய், இவன் குடிச்சிருக்கான் என்பதற்கு ஒரு சர்டிபிகேட் வாங்கிகிட்டு, ஸ்டேஷனுக்குக் கொண்டுவா! குடிச்சதுக்கும், திருடின [illegible] துக்கும் கேஸ் செய்துக்கலாம்!

வேலு : நான் திருடவேயில்லிங்க! ராத்திரி என்ன நடந்ததென்றே தெரியலிங்க!

கான் : வா, வா! ஒன்னும் தெரியாத நிலையில் தான் இன்னமும் இருக்கிறே! (அழைத்துக்கொண்டுபோகிருன்.)

செங் : ஐயா! ஏதோ பொல்லாத வேளை! இந்த நிலைக்கு வந்துட்டுது! சாமி! வேலண்ணன் திருடியிருக்கமாட்டாரு! அண்ணன்! என்ன நடந்ததென்று நீதான் சரியாகச் சொல்லேன்! (பின் தொடர்ந்து போகிருள்.)

திவா : இன்ஸ்பெக்டர் சார்! நீங்க அபார திறமைசாலிதான்! திருட்டுன்னு சொல்லி வாய் மூடுவதற்குள், எல்லாத்தையும் துப்பு துலக்கிப்பிட்டிங்களே!

இன் : இதெல்லாம் சாதாரண கேசுங்க! இதைவிட, மர்மம், மாயம் நிறைந்த களவு, கொலையெல்லாம், ஊதித்தள்ளியிருக்கேன்!

ஏழு : திருட்டுன்னு வந்தீங்க! உடனே கண்டுபிடிச்சீங்க. அது மட்டுமல்ல அவன் குடிகாரன்னு வேறே கண்டுபிடிச்சிட்டிங்க!

இன் : நாய் மோப்பம் கண்டுபிடிக்கிறதுன்னு சொல்லுவாங்க! அதுமாதிரிதான்! திருட்டு நடந்த இடத்தைப் பார்த்தா போதும், உடனே அது எப்படி நடந்ததுன்னு எனக்குத் தெரிந்துவிடும்! ஆளைப் பார்த்தவுடனேயே சொல்லிவிடுவேன், அவன் குடிகாரனு இல்லையா என்று! பத்துமைல் தூரத்துக்குள் எவன் குடிச்சிருந்தாலும் சரி, கோழிக் குஞ்சைப் பருந்து பிடிக்கிறது மாதிரி பிடித்துவிடுவேன்! உங்க பையன் சாரங்கன் எங்கே?

திவா : (பதறிப்போய்) எதற்கு, எதற்கு?

இன் : இந்த ரிபோர்ட்டில் கையெழுத்துப் போடச்சொல்லனும். பரவாயில்லை, நான் போகிறேன்! கான்ஸ்டேபிளிடம் கொடுத்து அனுப்புகிறேன்! நான் போய் வருகிறேன்!

திவா : ஏழுமலை, இன்ஸ்பெக்டரைக் கொண்டு போய் விட்டுவிட்டுவா! நான் பூஜைக்குப் போகனும்!

[இன்ஸ்பெக்டரும், ஏழுமலையும் போகிருர்கள். திவான்பகதூர் "நாரா[illegible]" என்று சொல்லிக் யணு! நாராயணு!" என்று சொல்லிக் கொண்டு மறுபக்கம் போகும் பொழுது, கோமளா மெதுவாக உள் நுழைகிருள்.)

திவா : கோமளா!

கோம : (திடுக்கிட்டு நின்று) ஏனப்பா!

திவா : இப்போதான் வருகிருயா, ராத்திரி எங்கேயிருந்தே!

கோம : சித்தி வீட்டுக்குப் போயிருந்தேன் !

திவா : அங்கே இல்லேன்னு செங்கமலம் பார்த்துட்டு வந்து சொன்னுளே !

கோம : அங்கேயே தங்கவில்லே, பின் மாமா வீட்டுக்குப் போனேன் !

திவா : மாமா வீட்டுக்கு நான் வந்திருந்தேனே!

கோம : எத்தனே மணிக்கு ?

திவா : எட்டுமணிக்கு !

கோம : ஏழுமணி வரைக்கும் அங்கேயிருந்தேன், பின் என் சிநேகிதி மாலா வீட்டுக்குப் போனேன், நாழியானதும் அங்கேயே தங்கிவிட்டேன், வேணுமின்னு அவளேக் கேளுங்க !

திவா : வேலிக்கு ஓணுன் சாட்சி ! அவளேக் கேட்டா, ராத்திரி நான் கோமளா வீட்டில் தங்கியிருந்தேன்னு சொல்லுவா ! பொய்யைச் சொன்னுலும் பொருந்தச் சொல்லு ! மாமா வீட்டுக்கு நான் போன பொழுது, "கோமளா ஏன் வருகிறதே யில்லே "ன்னு கேட்டாங்க ! எங்கே போயிருந்தே உண்மையைச் சொல்லிடு !

கோம : அத்தை வீட்டுக்கு !

திவா : அங்கேயெல்லாம் ஏன் போறே ! அரைக்காசுக்குக்கூட.........! அது சரி, அங்கே யார் இருக்கா? எல்லாருந்தான் ஊருக்குப் போயிருக்காங்களே ! அந்தக் காவாலிப் பயல் பாலு மட்டும்தான் இருக்கான். அடி பாவி ! தலேயிலே கல்லேப் போட்டுவிட்டியே !

[கோமளா அழுகிருள்.]

திவா : நாருயணு ! நாராயணு ! இனிமேல் வீட்டைவிட்டு அடியெடுத்துவை, உன் காலே முறிச்சுடுவேன்.

கோம : பாலு அத்தான் என்னேக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சத்தியம் செய்து கொடுத்திருக்காரு !

திவா : ஏண்டி சத்தியம் செய்யமாட்டான், கொஞ்சம் அசந்தால், தாலியைக்கூட கழுத்தில் கட்டுவான் ! அவனுக்கென்ன நஷ்டம் ! அவனப்பன் இன்சால்வெண்ட் உன் அப்பன் லட்சாதிபதி ! ஏன் சத்தியம் செய்யமாட்டான் ! நாராயணு ! நாராயணு ! என்ன பாவம் செய்தேனே, பெண்ணும், பிள்ளேயும் இப்படி வந்து நமக்கு வாய்த்தது !

[கோமளாவின் மாமா கோபாலசாமி பிள்ளே வருகிருர்.]

கோபா : என்ன மாப்பிள்ளே! ரொம்ப கோபமா இருக்கிறீங்க ! ராத்திரி கோமளாவைத் தேடிகிட்டு வந்தீங்களா ?

திவா : போகிறபொழுது, பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன் ! அவள் சினிமாவுக்குப் போயிட்டு எனக்கு முன்னே வீட்டுக்கு வந்துவிட்டாள் !

கோபா : இப்பொழுது ஏன் அவள் அழுகிருள் ?

திவா : சினிமாவுக்கு அதிகம் போகக்கூடாதுன்னு கண்டித்தேன். அதற்கு அழுகிருள் !

கோபா : என்ன மாப்பிள்ளே ! அதுக்கா இப்படிக் கண்டிக்கிறது ! தாயில்லா பொண்ணு, அழுகிறதைப் பார்த்தால், பரிதாபமாயிருக்கு ! நீபோ, கோமளா !

[கோமளா போகிருள்,]

திவா : இப்படிக் கொஞ்சம் கடுமையா இருந்தால்தான் நல்லது !

கோபா : ஆனுலும் இவ்வளவு கண்டிப்பு கூடாது ! நான் வருகிறேன் ! (போகிருர்)

திவா : கோமளா செய்தது வெளியே தெரிந்தால், அவமானம், அவமானம். நாராயணு ! நாராயணு ! (திரும்பிப் பார்க்கும் பொழுது செங்கமலம் நிற்பது தெரிந்ததும், பேச்சை நிறுத்திக்கொள்ளுகிருர்.)

செங் : ஐயா ! கோடி புண்ணியம் உண்டு! நீங்கதான் வேலுவைக் காப்பாத்தனும் !

திவா : நான் என்ன செய்யமுடியும். அவன் ஏன் திருடினுன் ?

செங் : திருடலிங்க, குடிமயக்கத்திலிருந்தது உண்மைதான் ! அந்தக் கடியாரம் அவர்கைக்கு எப்படிவந்ததென்னு தெரியாதுங்களாம் !

திவா : அது சரி ! குடிச்சது தப்புதானே ! பஞ்சமா பாதகத்தில் ஒன்னு குடியாச்சே! அதை எப்படி இவன் தொட்டான் !

செங் : அதுவும் சின்ன எசமான் கட்டாயப் படுத்தினுராம், கொஞ்சம் தெளிவு வந்ததும், ராத்திரி நடந்ததைப்பற்றி லேசான ஞாபகப்படுத்திச் சொன்னது.

திவா : இவன் குடிச்சுட்டு வந்ததுமில்லாமல், சாரங்கன்மேல் வேறு பழி போடுகிறானா? அவன் சொன்னதாகத்தான் இருக்கட்டும், இவனுக்கு எங்கே புத்தி போச்சுது? இன்னைக்குக் குடிக்கப் பழகுகிறவன் நாளைக்குக் கொலைக்குக்கூடத் தயாராகி விடுவான்.

செங் : இவ்வளவும் சின்ன எசமானுக்கும் தெரிஞ்சிருக்கணுங்க!

திவா : சீ! மறுபடியும் அப்படிப் பேசாதே எனக்கு மகாக் கோபம் வந்துடும்! வேலை செய்ய வந்தவளுக்கு வீட்டுப் பிள்ளையைப்பற்றி என்ன பேச்சு வேண்டியிருக்கு!

[ஏழுமலை திரும்பி வருகிறான்.]

திவா : போலிஸ் ஸ்டேஷனுக்குப் போய் வருகிறியா?

ஏழு : ஆமாம்! குடிச்சிருக்கான்கிறதுக்கு டாக்டர் சர்டிபிகேட்டும் வந்துட்டுது!

திவா : டிரைவர் இப்போ எங்கே இருக்கான்?

ஏழு : உள்ளே, கம்பி எண்ணிக்கிட்டு! இப்போ நிதானம் வந்துட்டுது!

செங் : சாமி! அவங்க குடும்பம் மானமா வாழ்ந்த குடும்பம்! எப்படியாவது பெரிய மனசு பண்ணுங்க! உங்க காலைப் பிடிச்சு கெஞ்சுகிறேன்! ஒரு வார்த்தை நீங்க சொன்னா போதும், வேலு அண்ணனை வெளியே விட்டுவிடுவாங்க!

திவா : வேலு அண்ணன்! உனக்கு அவன் உண்மையிலே அண்ணன் முறைதானா?

ஏழு : (ஏளனத்துடன்) பகலில் அண்ணன் தங்கைன்னு பாவனை! ராத்திரியில்......

திவா : எவ்வளவு நாளா, இந்த விபசாரத் தனம்?

செங் : ஐயோ! இந்தப் பேச்சு அடுக்காதுங்க! உங்களுக்கும் அக்கா, தங்கை இருந்திருப்பாங்க, பெரியப்பா வீட்டுப் பெண்ணு, சின்னம்மாபெண்ணு இருக்கும் வாய்கூசாம சொல்லாதீங்க!

ஏழு : மகா நியாயம் பேசறாள்!

செங் : சரிதான் கணக்குப்பிள்ளையா! தனியாப் பார்க்கிறப்போ, பணத்தைக்காட்டி, பல்லைக்காட்டி என்னை நீ கெடுக்கப்பார்த்தது தெரியாதா?

திவா : நீ நடந்துக்கிற விதத்திலிருந்து அவங்களுக்கு அந்தக் கெட்ட எண்ணம் வந்திருக்கும்!

செங் : அந்த கணக்கப்பிள்ளைக்கு எசமான் தானே நீங்க! அதுகூட போவுதுங்க! என்னை என்ன வேணுமின்னாலும் சொல்லுங்க! வேலு அண்ணனை விட்டுடச் சொல்லுங்க! அப்புறம் சின்ன எசமான் கட்டாயப்படுத்தினாக்கூட, அண்ணன் குடிக்காம இருக்கும்!

திவா : பார்த்தியா, ஏழுமலை! சாரங்கன் கட்டாயப்படுத்திதான், டிரைவர் இவ்வளவும் செய்தான்னு இவள் சொல்லுறாள்!

ஏழு : இனிமேல் ஊர் பூராவும் போய் இதைச் சொல்லிகிட்டு இருப்பா!

திவா : சம்பளத்தைக் கணக்குப்பார்த்துக் கொடுத்துடு! இன்னையிலிருந்து இவள் வேலைக்கு வேண்டாம்!

செங் : நான் என்னங்க தப்பு செய்தேன்?

திவா : அவன் திருடினான், நீ விபசாரியாயிட்டே பெரிய இடத்திலே உங்கமாதிரி இருக்கிறவங்களை வேலைக்கு வைச்சுக்க முடியாது!

செங் : சரிதாய்யா! கூலி வேலைக்கு வந்தோமென்னு, என்ன வேண்டுமானாலும் ஏசிடாதீங்க! பெரிய இடமாம் பெரிய இடம்! பெரிய இடத்து லட்சணம் எனக்குத் தெரியாதா! குடிச்சுட்டு வீதியிலே புரளுகிற பையனும், ராத்திரி பூரா எங்கேயோ போயிட்டு வீடு திரும்பின பெண்ணு! கோமளாம்மா கண்ணைக் கசக்கினதும், "நாராயணா! நாராயணா!" என்று தலையில் போட்டுக்கிட்டதும் நான் பார்த்துட்டுதான் வந்தேன்! இதிலே வேறே பெரிய இடங்கிற ஜம்பம்.

திவா : சீ! கழுதை! வீட்டைவிட்டுப் போறியா, அடிச்சுத் துறத்தச் சொல்லட்டுமா?

செங் : போறேங்க! கழுதையாயிருந்தா சும்மா போவாதுங்க, இரண்டு உதை கொடுத்துட்டுப் போவும்!

[போகிறாள்.]

திவா : எல்லாம் நம்ம பிசகுதான்! கோமளாவுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிப் போட்டிருந்தா இந்த பழிபாவம் வந்திருக்காது.

ஏழு : ஆமாங்க ! இந்த வருசமாவது செய்துட்டா நல்லது !

திவா : நீ பக்கத்திலிருக்கிறதை நான் கவனிக்கவில்லையே ! நீர் போய் கணக்கு வேலையைப் பாரும் !

[ஏழுமலை போகிறான்.
சாரங்கன் தலைசீவி, உடையணிந்து, டையுடன் வருகிறான், கோட் மட்டுமில்லாமல்.]

திவா : மைனர் எங்கே கிளம்பிவிட்டார் ?

சார : என் பிரண்டு ஒருத்தன், இன்னைக்கு கல்கத்தாவுக்குப் போகிறான்......

திவா : நீ அவனோட போய், காசியில் ஒரு முழுக்குப் போட்டுட்டு வருகிறதுதானே ! பிரண்டு ஒருத்தனும், ஒருத்தன் ! ஊரில் எவனெவனுக்கு நன்னடத்தை ஜாமின் வாங்கவேண்டுமோ அவனெல்லாம் உனக்குபிரண்டு ! இன்னையிலிருந்து ஊர் சுத்தினது போதும், போய் பாங்கு வேலையைப் பாரு ! நான் போயிட்ட அப்புறம் நீதானே பார்க்கணும் !

சார : சரிய்யப்பா !

திவா : என்னடா, என்னைப் போச்சொல்றியா?

சார : இல்லை, நான் பாங்குக்கு இனிமேல் தவறாமல் போறேன் ! (பேசிக்கொண்டே, நாற்காலியில் கிடந்த கோட்டை எடுத்து மாட்டுகிறான். அதில் ஒரு பேனா தொங்குகிறது.)

சார : இந்தப் பேனா ஏது ?

திவா : உம் பேனாவாத்தான் இருக்கும்.

சார : இல்லை, இது வேலுவோட பேனா மாதிரி இருக்குது.

திவா : அவன் பேனா உங்கிட்ட எப்படி வந்தது ?

சார : இப்போதான் ஞாபகம் வருகுது. நான்தான் என் வாட்சை அவன் பையில் போட்டுவிட்டு, அவன் பையிலிருந்த பேனாவை நான் எடுத்துக்கொண்டேன்.

திவா : இதெல்லாம், இராத்திரி உன் தர்பாரில் நடந்ததா ?

சார : (தலையசைத்து) தோட்டத்தில் கொடுத்துவிட்டு......ஜன்னல் வழியாக நான் உள்ளே வந்து......

திவச : ஞாபகம் வந்தவரைக்கும் அப்படியே வைத்துக்கொள், வெளியே சொல்லிக் கொண்டிருக்காதே.

சார : பாவம் ! போலிசில் சொல்லி வேலுவை விட்டுவிடச் சொல்லலாம் !

திவா : நடந்தது நடந்துவிட்டது ! இனிமேல் அதைப்பத்தி ஒன்னும்செய்யவேண்டாம்! ஒருத்தன், இரண்டுபேருக்கு தண்டனை கொடுத்தால், மற்றவர்களுக்குப் பயம் இருக்கும் ! பேசிக்கொண்டு காலத்தைப் போக்காதே ! நீ போய் பாங்குக் கணக்கைப் பாரு !

[சாரங்கன் தயக்கத்துடன் போகிறான். சமையற்காரன் ஐயாசாமி வருகிறான்.]

ஐயா : பூஜைக்கு எல்லாம் தயாராயிருக்கு !

திவா : அதை மறந்துவிட்டேனே! நாராயணா! நாராயணா ! (துளசி மாலையை எண்ணிக் கொண்டு போகிறார்.)

காட்சி 4.

[சிறைச்சாலை செங்கமலமும் வேலுவும்.]

செங் : ஆறுமாதத் தண்டனை ! நான் எதிர் பார்க்கவேயில்லை, ரொம்ப அநியாயம் !

வேலு : நியாயமோ, அநியாயமோ, தண்டனை தந்துவிட்டார்கள், அதில் ஒரு வாரமும் ஆகிவிட்டது !

செங் : இத்தனைக்கும் நாம் என்ன குத்தம் செய்துட்டோம் !

வேலு : ஏழை பாழைங்கிற குத்தம்தான் !

செங் : சின்ன எசமான், நீ, இரண்டுபேரும் சேர்ந்துதான் குடிச்சீங்க, ஆனால் உனக்குத் தண்டனை கொடுத்து, ஜெயிலில் போட்டுட்டாங்க ! அவர் இப்போ பாங்குக்குத் தினம் போயிட்டு வருகிறாரு ! அவருக்கு ஒண்ணும் நேரலை ! ஒரு பாவமும் அறியாத என்னை விபசாரின்னு வேலையை விட்டு நீக்கிட்டாங்க, ஊர் சுத்தி வருகிற கோமளம்மாவைப்பற்றி யாரும் ஏதும் சொல்றதில்லை.

வேலு : தண்டனை கொடுத்து உள்ளே போட்டபோது, எனக்கும் அப்படித்தான் தோணுச்சு ! அவருக்கு ஒன்றும் இல்லை, எனக்கு மட்டும் தண்டனை எதற்கு

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கார் மெதுவாகப் போய்க்கொண்டிருந்தது. காரை ஓட்டும் கமலநாதனின் கைகள் நடுங்கின. தங்கம் இதைக் கவனித்தாள், கமலநாதனின் முகங்கூட, கறுத்து, நோய்வாய்ப்பட்டவன்போலக் காணப்பட்டது.

"குளிர் அதிகமாயிருக்கிறதா?" என்று தங்கம் கேட்டாள். குளிர் இருப்பதாக அவளுக்குத் தெரியவில்லை. காலையின் இளவெய்யல் மாறி, சூடு தாக்க ஆரம்பித்துவிட்டது. செடி, கொடி, இலைகளில் தவழ்ந்த பனித்துளிகள் மறைந்துவிட்டன. அடர்ந்த மரங்களிலிருந்து பனிப்புகை எழுந்து மறைந்துகொண்டிருந்தது. தூரத்தில் மூடிக்கொண்டு, விலகிச் செல்லும் பனிப்புகையைப் பார்த்ததும், தங்கத்தின் மனதில் மகிழ்ச்சி மூண்டது, அதைப் போலவே அவளுடைய வாழ்விலும் அதுகூட வல்ல—அவர்களுடைய வாழ்வில் மூடிக்கிடந்த பனி விலகிக்கொண்டிருக்கும் நேரம்! பிரிந்து கிடந்த அவர்கள் மீண்டும் ஒன்றுசேர்ந்து செல்வதை வரவேற்பதுபோல, சிறு பறவைகள் "கிரிச்"சிட்டு வழியில் பாய்ந்து சென்றன.

"கடைசியாக நாம் போனதற்கப்புறம், தோட்டத்துக்கு நான் போகவேயில்லை. தோட்டக்காரன் வந்து சொல்வதைத்தவிர, தோட்டம் எப்படியிருக்கிறதோ தெரியவில்லை. நாம் வைத்த பதியங்கள் எப்படி வந்து எங்கு வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை!" தங்கம் பேசியதைக் கமலநாதன் கேட்கவில்லை. அவனுடைய தனிமை, முகத்திலிருந்த கடுமை தணியவில்லை.

வழக்கமாகச் செல்லும் பாதையில் செல்லாமல் கார் வேறு வழியில் திரும்பியது.

"இந்தப் பக்கமாகப் போகவேண்டும்!" என்று தங்கம் கவனப்படுத்தினள்.

"பரவாயில்லை, இந்தப் பாதைதான் நன்றாகயிருக்கிறது" என்று கமலநாதன் காரை வேகமாக விட்டான். கமலநாதன் சொன்னதைப் போல பாதையொன்றும் நல்லதாகக் காணப்படவில்லை. ஏரிக்கரையில் ஏறி, மேடுபள்ளத்திலும், சுற்றுவளைவுகளிலும் சரிந்து பாதை கிடந்தது. இந்தப் பாதை வழியாகப் போனல், தோட்டத்திற்கு எப்படிப் போய்ச்சேரும் என்பதும் தங்கத்திற்குப் புரியவில்லை. தோட்டத்திற்குப் போகும் பாதையிலிருந்து, இப்பொழுது கமலநாதன் போகும் பாதை விலகிச் சென்றுகொண்டிருந்தது. கமலநாதனுடைய சுபாவம் அவளுக்குத் தெரியும். திடீரென்று ஆச்சரியத்தை உண்டாக்கும் விதத்தில் ஏதா

என்று! அப்புறம்தான் புரிஞ்சுது, ஏழையெல்லாம் ஈ மாதிரி, பணம் படைத்தவங்களெல்லாம் பெரிய வண்டுமாதிரின்னு!

செங் : எப்படி?

வேலு : ஜெயிலில் நான் உட்கார்ந்திருந்தபோது, இதை யோசிச்சிக்கிட்டே, அண்ணாந்து பார்த்தபோது, சிலந்திக்கூட்டைப் பார்த்தேன்! ஈ, கொசு, வந்தால் சிலந்திக்கூட்டில் மாட்டிக்கொள்ளும்; வண்டு வந்தால் சிலந்திக்கூட்டை அறுத்துக்கொண்டு போய்விடும்! அப்படியே வண்டு மாட்டிக்கொண்டால்கூட, சிலந்தியே அறுத்து அதை விட்டுவிடும். நம்ம காலத்தில் இருக்கிற சட்டமும் இப்படித்தான், ஏழைகளெல்லாம் அந்த சிலந்திக் கூட்டில் மாட்டிக்கொள்ளுகிறோம். நம்மைப்போலவே, அதைத் தீண்டுகிற, பணம்படைத்தவர்கள் அதை அறுத்துக்கொண்டு போகிறார்கள், அவ்வளவுதான்.

(முற்றும்.)

வது செய்துவிடுவார்! இன்றைக்கு என்ன ஆச்சரியம் வரப்போகிறது என்று அவள் காத்துக்கொண்டிருந்தாள்.

வேகமாகப் போன காரை கமலநாதன் மெதுவாக ஓட்டினன். சத்தம் குறைந்தது, பாதை வர, வர மேட்டு நிலத்தில் உயர்ந்து சென்றது. அது ஒரு குன்றை வளைத்துச் செல்லும் பாதையாக இருக்கும். பக்கத்தில் பாறை மேடுகளும், சில இடங்களில் செங்குத்தான பள்ளமும் தூரத்தில் காணப்பட்டன.

முதல்தடவையாகக் கமலநாதன் பேச ஆரம்பித்தான்.

"தோட்டத்திற்கு இதற்குமுன் நீ வரவில்லையா?"

"உங்களுடன் வந்ததுதான்!" தங்கம் மிகப் பரிவுடன் பதில் தந்தாள். கடைசியில் அவர் பேசிவிட்டார். அவளுடைய பதில் கமலநாதனுக்குத் திருப்தியளிக்கவில்லை. சேகரனும், தங்கமும் இதற்குமுன் தோட்டத்துக்கு வந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால், தோட்டத்துக்குப் போவதாக முதல்நாள் தங்கம் அறிவித்திருக்கமாட்டாள். "உண்மையான பதில் வரவில்லை—இயற்கைதானே! கோர்ட்டில் கேள்வி கேட்டதும் உண்மையை எந்தக் குற்றவாளியும் சொல்வதில்லை" என்று கமலநாதன் நினைத்துக்கொண்டான்.

"நீ நீண்டநாள் லீவு எடுக்கப்போகிருயா?"

"ஆமாம்! உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நீ செய்வது எனக்குத் தெரியாதென்று நினைக்கிருய்?" கமலநாதனின் குரலில் கடுமையிருந்தது.

தங்கம் பேசாமலிருந்தாள். உண்மையில் அந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது?

அவளால் என்ன பதில் சொல்லமுடியும்? குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது என்று கமலநாதன் நிச்சயித்துக்கொண்டான்.

தங்கம் மறைவாக வைத்திருந்த கடிதங்கள் அவன் பையிலிருந்தன. அவற்றை எடுத்துக் கொடுத்து, "இவற்றுக்கு என்ன சொல்லுகிருய்?" என்று கேட்கலாமாவென கமலநாதன் நினைத்தான். அந்தக் கடிதங்களை வாங்கி, அவள் கிழித்து வெளியே எறிந்துவிட்டால்?

குற்றவாளி—அவள் குற்றவாளி—துரோகி—வாழ்க்கையின் அடிப்படையான நம்பிக் கையை அவள் தகர்த்துவிட்டாள்—கமலநாதன் உள்ளம் கொதித்தது.

கடிதத்தில் வரும் சில வாக்கியங்களை கமலநாதன் அவளுக்கு ஞாபகமூட்டினன்.

"உனக்கு வீடும், வாழ்வும் சிறைமாதிரியாகவா இருந்தது?"

"அதைவிடக் கொடியதாக இருந்தது!" தன்னைப்போலவேதான் கணவனும் துன்பப்பட்டிருக்கவேண்டுமென்று தங்கம் நினைத்துச் சொன்னுள்.

குலசேகரன் கடிதத்தில் இருப்பதை தங்கத்தின் பதில் பிரதிபலித்தது. கடைக்கண்ணுல், அவளின் முகத்தைக் கமலநாதன் கவனித்தான். அவள் முகம் அசைவற்று இருந்தது. குற்றவாளியின் முகத்தைப்போலக் காணப்படவில்லை. ஆனல் பெண்ணை யாரால் நம்ப முடியும். வானத்தில் பறவை சென்ற வழியை நீரில் மீன் சென்ற வழியைப் பின் கண்டுபிடித்தாலும் கண்டுபிடிக்கலாம், ஆனல் ஒரு பெண் மனம் செல்லும் வழியை ஒரு மனிதனல் கண்டுபிடிக்கமுடியாது. இல்லாமலா நித்தியானந்த சாமிகள் "பெண்ணுகிவந்த மாயப் பிசாசம்!" என்று அடிக்கடி சொல்லுவார்! பெண்களெல்லாம் மாயப்பிசாசங்கள்! ஆசை வார்த்தை சொல்லி மோசம் செய்பவர்கள்! நம்பிக்கைத்துரோகம், நயவஞ்சகம்! கமலநாதனின் உள்ளத்தில் சுடுசொற்கள் புரண்டன, கொதித்தன.

"இன்றைக்குத்தான் விடுதலை நாளா?"

"ஏன் கேட்கிறீர்கள்?"

"உண்மையைச் சொல்லிவிடு, இல்லாவிட்டால்......"

"ஆமாம்! உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"குற்றங்களைக் கண்டுபிடிப்பதைத் தொழிலாகக் கொண்ட எங்களுக்கு இதுகூடத் தெரியாமலா போய்விடும். கடைசியாக ஒன்று கேட்கிறேன். விடுதலை கிடைக்கும்பொழுது குலசேகரன் காத்திருந்து வரவேற்பானு?"

இந்தத்தடவை தங்கம் ஆச்சரியமடைந்தாள். குலசேகரன் வேலூர் போயிருப்பது கமலநாதனுக்கு எப்படித் தெரியும் என்று அவளுக்குப் புரியவில்லை. குற்றவாளி அகப்பட்டுக்கொண்டாள் என்று கமலநாதன் நினைத்தான்.

"குலசேகரன் காதல்கொண்டிருப்பது உண்மையா?"

சகுந்தலாவின்பால் குலசேகரன் காட்டும் அக்கரை—அவளைப் போய்ப் பார்த்துவிட்டு, அவன் வருவது—சகுந்தலாவைப் பற்றி நேரடியாகக் கேட்டால் பதில் தரமுடியாமல் அவன் மழுப்புவது, இவைகளுக்கு காரணம் காதலாக இருக்குமென்று அவள் இதுவரை நினைத்ததில்லை.

"உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

இந்தக் கேள்வியைக்கூட, அமைதியாகக் கேட்கிறாளே, பெண்கள் கடினமான—அழுத்த மான மனதுடையவர்கள்தான்! கமலநாதன் திடீரென்று நிலைமையைச் சமாளித்தான், "குலசேகரன் என்னிடம் அதை ஒப்புக் கொண்டான்."

"நான் எதிர்பார்க்கவில்லை."

"ஆனால் குலசேகரன் அவனுடைய அரு மைக் காதலியைச் சந்திக்கப்போவதில்லை!" என்று கமலநாதன் உறுமினான்.

குலசேகரனையும், சகுந்தலாவையும் பற்றி கமலநாதன் ஏளனமாகப் பேசுவது தங்கத் திற்குப் பிடிக்கவில்லை, கோபமே வந்தது. "அந்தச் சந்திப்பை நீங்கள் தடைசெய்யமுடி யாது."

"உலகத்தில் பழி பாவத்துக்கு அவன் பின் வாங்கப்போவதில்லையா?"

"உண்மையான காதல் எதற்கும் பின்வாங் காது."

"அதையும் பார்த்துவிடுகிறேன்!" கமல நாதன் பின்னால் சாய்ந்துகொண்டான். கார் நின்றுவிட்டது. உயர்ந்த மேடு, ஒருபக்கத்தில் செங்குத்தான பாறை, மறுபக்கம் ஆழமான பள்ளம்!

"ஏன் நிறுத்திவிட்டீர்கள்" என்று தங் கம் நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"கார் கெட்டிருக்கிறது. இரு, பார்க்கி றேன்" என்று கமலநாதன் இறங்கி, முன்னால் இருந்த மூடியைத் தூக்கிவிட்டான். தங்கம் காரில் உட்கார்ந்திருந்தாள்.

"என்ன தவறு?" காலையில் அவள் காரை எடுத்தபொழுது தவறு எதுவும் இருப்பதா கத் தெரியவில்லை. இரண்டு நாட்களுக்கு முன் தான் தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டு, கார் சரிபார்க்கப்பட்டுச் சுத்தம் செய்யப்பட்டது.

கமலநாதன் பின் பெட்டியைத் திறந்து, குறடு, சுத்தியை எடுத்துக்கொண்டு முன்வந் தான். தங்கம் இறங்கிவந்தாள். காரில் என்ன கோளாறு என்று அவளுக்குப் புரிய வில்லை. அதிலும் கமலநாதன் என்ன செய்ய முடியும் என்று அவளுக்குத் தெரியவில்லை.

"ஏதாவது பெரிய கோளாறு?"

"இல்லை நீ காரில் உட்கார்! நான் பத்து நிமிடத்தில் சரிபார்த்துவிடுகிறேன்!" கமல நாதன் சுத்தியால் தட்டிவிட்டு, ஆணியைக் கழற்றிக்கொண்டிருந்தான். தங்கம் மரத்தின் நிழலில் நின்று சுற்றிலும் பார்த்தாள். ஒழுங் கான பாதையிலிருந்து விலகி வெகுதூரம் வந்துவிட்டார்கள். பாதை மேடுபள்ளமாகவும் கரடுமுரடாகவும் இருந்ததன்றி, அதிகம் உப யோகப்படுத்தப்படாததாகவும் இருந்தது. இந்தப் பாதையில் எங்கு போகிறோம் என்று அவளுக்குப் புரியவில்லை.

"இந்தப் பாதை எங்கு போகிறது?"

தங்கம் கேட்பதைக் கவனிக்காமல், கமல நாதன் இயந்திரத்தில் எதையோ கழற்றிக் கொண்டிருந்தான். தங்கம் மறுபடியும் அதே கேள்வியைக் கேட்டாள்.

"நரகத்துக்கு!" என்று கமலநாதன் கோபத்துடன் பதில் தந்தான். வேலை மும்மு ரத்தில், குறுக்கிடவேண்டாமென்று தங்கம் மரத்தடியில் மீண்டும் நின்றாள்.

கமலநாதன் நீண்ட குறடைக் கீழே போட்டு காரில் வந்து உட்கார்ந்து சரிபார்த்தான், அவன் முகம் திருப்தியடைந்தது. மீண்டும் வெளியே வந்து, முன் மூடியை மூடி, சுத்தியை யும் குறடையும் பின் பெட்டியில் போட்டு மூடினான்.

தங்கம் காரருகில் வந்தாள்.

"காரை எடு! சரியா என்று பார்ப்போம்."

தங்கம் காரை ஓட்ட எடுத்தாள். கார் கிளம் பியது, வீரிட்டு, ஓட்டும் வளையத்தைத் திருப்பினால், வளையம் திரும்பியதே ஒழிய, கார் நேராகப் போய்க்கொண்டிருந்தது, பயத் துடன் பிரேக்கைப் போட்டாள். பிரேக் பிடிக்க வில்லை. அது கழட்டி விடப்பட்டிருந்தது.

கார் வேகமாகப் போனது. "ஐயோ" என்று தங்கம் கூச்சலிட்டாள். காரை நிறுத் தும் வழியின்றி பாதைவளையுமிடம் வந்ததும், கார் நேராகச் சென்று வழியை மீறி, பள்ளத் தில் சாய்ந்தது, தடால் என்று சத்தம்! சரி வில் புரண்டது, தங்கத்தின் கண்கள் சுழன் றன, உலகமே சுழன்றது, தீயின் சுவாலை தாக்கியது, புகை மூடியது.

கார் புரண்டு விழுவதை கண்கொட்டாமல் பார்த்துவிட்டு, "குற்றத்துக்குத் தகுந்த தண்டனை, கள்ளக்காதல்! அது சரிந்துவிட்டது" என்று கூறிக்கொண்டு கமலநாதன் மரங்களின் இடையில் இருந்த ஒரு ஒற்றையடிப்பாதை வழியாக நடந்து சென்றான் திரும்பிப் பார்க்காமல்.

* * *

பங்களூரிலிருந்து வீடுதிரும்பிய டாக்டர் சஞ்சீவி தனது நாற்காலியில் சாய்ந்தார். டிரெயின் ஒருமணிநேரங்கழித்து அன்று வந்தது. அவரில்லாதபொழுது வந்த கடிதங்களை வேலைக்காரன் கொண்டுவந்து வைத்தான். அவைகளில் பெரும்பாலானவை விளம்பரக் கடிதங்கள், சில பழைய நோயாளிகள் எழுதியவை.

டெலிபோன் மணி அடித்தது. வேலைக்காரன் போய் எடுத்துப் பேசிவிட்டு வந்தான்.

"உங்களைக் கூப்பிடுகிறார்கள்!"

"யார்?"

"ஆஸ்பத்திரியில்! ஏதோ அவசரமாம்."

ஆஸ்பத்திரியிலிருந்து வரும் அழைப்புகள் எப்பொழுதும் அவசரம், அவசரம் என்றுதான் இருக்கும். போனதும் ஒன்றுமிராது. புதிதாக வருபவர்களுக்கு சிறு எதிர்பாராதது கூட ஆபத்தானதாகத் தோன்றும் அது இயற்கைதான்.

டாக்டர் சஞ்சீவி டெலிபோனை எடுத்தார். மறுபக்கத்தில் பேசியது டாக்டர் நாகசாமி. நாகசாமி ரணசிகிச்சையில் அந்த ஆஸ்பத்திரியில் முதல்வராக இருப்பவர். ரணசிகிச்சையென்றாலே கசாப்புக்கடை வேலையென்று டாக்டர் சஞ்சீவி ஒதுக்கித்தள்ளுபவர். ஆதலால் இருவருக்கும் ஆகாது; இருவரும் சந்தித்தால் இருவர் கண்களில் கோபம் தெரிப்பதை மற்றவர்கள் வேடிக்கை பார்ப்பார்கள். அப்படிப்பட்ட எதிரி இன்று தன்னை அழைக்கிறார் என்றால் அது ஆச்சரியமானதுதான்.

"சஞ்சீவி பேசுகிறேன், என்ன?"

மறுபக்கத்திலிருந்து வந்த செய்தி அவரை நிலைகுலையச் செய்தது.

"என்ன, தங்கத்திற்கா?"

"ஆமாம்! கார்விபத்தில் சிக்கி, விலா வெலும்பு கையெலும்புகள் முறிந்துவிட்டது. அந்த வழியே வந்த லாரி, அவளைத் தூக்கி வந்து போட்டிருக்கிறார்கள். உடலில் தீப்புண்களும் இருக்கின்றன!"

"என்ன, என்ன? அவளுடைய உயிருக்கு ......" டாக்டர் சஞ்சீவியால் மேற்கொண்டு பேசமுடியவில்லை.

"சொல்லமுடியாது. தியேட்டருக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். ஆபரேஷனுக்குத் தயார் செய்யச் சொல்லியிருக்கிறேன். டாக்டர் ரகுராமனும் வருகிறார்."

"இதோ, வந்துவிட்டேன்." என்று டெலிபோனை வைத்துவிட்டு, டாக்டர் சஞ்சீவி வெளியே ஓடிவந்தார்.

(தொடரும்)

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0

இலங்கைக்கு வி. பி. மூலம்

ஆண்டுக் கட்டணம்	7—8—0

வினாவும் விளக்கமும்

வினா : கடவுள் மறுப்புக்கும் உருவவழிபாட்டின் மறுப்புக்கும் இலக்கியங்களிலிருந்து ஆதாரங்கள் காட்ட முடியுமா?

விளக்கம் ; "ஒரு குறிப்பிட்ட கருத்துக்குப், பண்டைய இலக்கியங்களில், ஆதாரங்கள் இருக்கின்றன என்ற ஒரே காரணம் இருந்தாலும், அதுவே போதுமானது, அந்தக் கருத்தை அப்படியே ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறோம்" என்று நாம் பிறரிடம் கேட்டுக்கொண்டதுமில்லை ; "ஒரு குறிப்பிட்ட கருத்துக்குப் பண்டைய இலக்கியங்களில் ஆதாரங்கள் இருப்பதால், அந்த ஒரு காரணமே போதுமானதாகையால், அந்தக் கருத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்" என்று நாம் பிறரை வற்புறுத்தியதுமில்லை. ஒரு குறிப்பிட்ட கருத்து இலக்கியத்தில் இருக்கிறதா? இல்லையா? என்பதல்ல நமது கேள்வி. ஒரு குறிப்பிட்ட கருத்து பகுத்தறிவு ஆராய்ச்சிக்கு ஒத்துவருகிறதா? இல்லையா? என்பதுதான் நமது கேள்வி.

எந்தவொரு கருத்தும் பகுத்தறிவு ஆராய்ச்சிக்கு ஒத்து வந்தால் அந்தக் கருத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம், ஒத்துவராவிட்டால் அந்தக் கருத்தை நாம் புறக்கணித்துத் தள்ளுகிறோம். கடவுள் கொள்கைகளிலேயும், உருவ வழிபாட்டுக் கொள்கைகளிலேயும் சிலபலவற்றை நாம் மறுக்கிறோம் என்றால், அவை பகுத்தறிவு ஆராய்ச்சிக்கு ஒட்டிவரவில்லை என்ற முழுமுதற் காரணம் காட்டி மறுக்கிறோமே ஒழிய, அவை இலக்கியங்களில் இல்லை என்பதையோ, மறுப்புக் கொள்கைகள் இலக்கியங்களில் இருக்கின்றன என்பதையோ முழுமுதற் காரணங்களாக காட்டி அல்ல. இலக்கியங்களிலிருந்து காட்டப்படும் ஆதாரங்கள் எடுத்துக்கொண்ட கொள்கைக்கு வலியூட்டுவனவாக வேண்டுமானால் கொள்ளலாமேயொழிய, அந்த ஆதாரங்கள் இலக்கியங்களில் இருக்கின்றன என்ற காரணத்துக்காக அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. இலக்கியங்களில் அவரவர் கருத்துக்கு ஏற்பக் கொள்ளத்தக்கனவாகவும் இருக்கக்கூடும்; தள்ளத்தக்கனவும் இருக்கக்கூடும். நாம் பகுத்தறிவுக்கு ஒட்டிவராத கடவுட்கொள்கைகளையும், உருவ வழிபாட்டுக் கொள்கைகளையும் அவை இலக்கியங்களில் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி மறுத்தொதுக்குகிறோம். அந்தப்படியான கடவுள் மறுப்புக் கொள்கைகளையும், உருவ வழிபாட்டு மறுப்புக் கொள்கைகளையும், அவை இலக்கியங்களில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அவற்றை ஏற்றுக்கொள்கிறோம். இந்த விளக்கத்தை அருள்நெறித் திருக்கூட்டத்தார் மேற்கண்ட வினாவை எழுப்புமுன் உணர்ந்து கொள்ளவேண்டும்.

கடவுள் மறுப்புக்கும், உருவ வழிபாட்டின் மறுப்புக்கும் இலக்கியங்களில் ஆதாரங்கள் உண்டா என்றால், இல்லாமலில்லை; இருக்கவே செய்கின்றன.

தமிழ் இலக்கியத்துறை நீண்டகாலமாகச் சமயப் பற்றுடையோரின் ஆதிக்கப்பிடியில் அகப்பட்டுக்கிடந்ததால், அவர்கள் கடவுள் மறுப்பு—உருவவழிபாட்டு மறுப்புக் கருத்துக்கள் அடங்கிய இலக்கியங்களை வளரவிடவில்லை, வாழவிடவில்லை. ஆகவேதான் ஒன்றிரண்டு கருத்துக்கள் ஆங்காங்கே அருகிக் காணப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக "மறுபிறப்பு இல்லெனும் மடவோர்" என்று 'பரிபாடல்' வசைமொழி வாயிலாகத் தெரிவிப்பதால், மறுபிறப்பு இல்லை, கடவுள் இல்லை என்று கருதிவந்தோர் பலர் இருந்திருக்கிறார்கள் என்பதை ஊகித்தறிந்து கொள்ளலாம். மறுபிறப்பு, மேல்உலக மறுப்பு, கடவுள் மறுப்பு போன்ற கொள்கைகளைப் பற்றியும், கொள்கைகளைக் கொண்டிருந்தவர்கள் பற்றியும் புறநானூறு, பத்துப்பாட்டு, பரிபாடல், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் சிறுசிறு குறிப்புக்கள் காணக் கிடக்கின்றனர்.

திருவாசகம், தேவாரம் போன்ற நூல்களில் நாத்தீகம் பேசியவர்களை வசைபாடும் இழிபண்பு ஆங்காங்கு கையாளப்பட்டிருப்பதைக்

கொண்டு, கடவுள் மறுப்பு, உருவவழிபாட்டு மறுப்புக் கொண்டிருந்தவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை அறியலாம்.

கடவுள் இல்லை என்று வாதிடும் நிரீசுவர வாதியைப் பற்றியும், கடவுளைப் பற்றிக் கவலைப்படாத உலகாயத மதத்தைப் பற்றியும், கடவுளை மறுக்கும் சாங்கிய மதத்தைப்பற்றியும் இலக்கியங்களில் குறிப்புக்கள் ஆங்காங்கு இருக்கவே செய்கின்றன.

“நட்டகல்லும் தெய்வமென்று நாலுபுஷ்பம் சாற்றியே சுற்றிவந்து மொணமொணத்துச் சொல்லும் மந்தரம் ஏதடா? நட்ட கல்லும் பேசுமோ?” என்று சித்தர் ஒருவர் கேட்பதும், இதுபோன்றே பல சித்தர்களும் பலபடப் பாடியிருப்பதும் உருவ வழிபாட்டை மறுப்பனவாகும்.

பிற்கால இலக்கியங்களிலும் ஆங்காங்கு உருவ வழிபாட்டின் மறுப்பைக் காணலாம். சிறு தெய்வ வழிபாடுகளை இராமலிங்கர் தம் திருஅருட்பாவில் பல இடங்களில் மறுக்கிறார். “ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று கூறி அலையும் அறிவிலிகாள்” என்னும் கருத்துப்பட அழைத்து, “அறிவொன்றே தெய்வமாவதை அறியீரோ” என்னும் கருத்துப்படத் தெளிவுரை கூறியிருப்பதன் மூலம் பாரதியார் உருவ வழிபாட்டை மறுத்தவராகிறார்.

கடவுள் மறுப்புக்கும், உருவ வழிபாட்டின் மறுப்புக்கும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் அழியா இலக்கியங்களிலிருந்து ஏராளமாக ஆதாரங்கள் திரட்டலாம்.

கடவுள் மறுப்புக் கோள்கைகளையும், உருவ வழிபாட்டு மறுப்புக் கொள்கைகளையும் நாம் ஏற்றுக்கொண்டிருப்பதற்குக் காரணம் பகுத்தறிவு ஆராய்ச்சி ஆகுமே ஒழிய, இலக்கியங்களில் ஆதாரங்கள் இருக்கின்றன என்பதற்காக அல்ல என்பதை அருள்நெறித் திருக்கூட்டத்தார்க்கு மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

❖ ❖ ❖

வினு : தி. மு. க. கோரும் திராவிட நாட்டுப் பிரிவினையால் டில்லி அரசியலார் பணிமனையில் பணியாற்றும் தென்னவரின் நிலை கெடாதா?

விளக்கம் : *திராவிடம் தனிக் கூட்டாட்சி நாடாகத் திகழவேண்டும் என்று கூறுவதற்குக் காரணமே, திராவிடம் தனி அரசியல் செல்வாக்கு பெற்றால், திராவிடத்தின் வளங்கள் வேற்றாரால் சுரண்டப்படாமல் திராவிடத்திலேயே தங்கினால், திராவிடத்தின் வரிப்பணங்கள் திராவிடத்துக்கே பயன்படுத்தப்பட்டால், திராவிடத்தின் உணவு உற்பத்தியும் பொருள் உற்பத்தியும் மேலும் மேலும் பெருக்கப்பட்டால், திராவிடத்தின் உள்நாட்டு வாணிகமும் திராவிடத்தாரின் கைகளுக்கே மாறினால், திராவிடத்தில் வாழும் ஏறத்தாழ எட்டு கோடி மக்களின் வாழ்வு வளரவும், வளம்பெறவும், வாய்ப்பு ஏற்படும் என்பதற்காகவேயாகும். இந்தியா ஒன்றாக இருந்து, வடவரின் ஆதிக்கம் நிறைந்த இந்தியப் பேரரசின் கீழ்த் திராவிடம் இருக்கும் வரையில் அத்தகைய வாய்ப்பு ஏற்படாது என்றே நாம் உறுதியாகக் கருதுகிறோம். அப்படிக் கருதுவதற்கு ஆக்கம் அளிக்கும் முறையில்தான் இறந்தகால—நிகழ்கால நிகழ்ச்சிகள் இருந்துவருகின்றன.*

டில்லி அரசியலார் பணிமனையில் பணியாற்றும் மிகமிகச் சிறு தொகையினரான தென்னவர்களைச் சுட்டிக்காட்டி, ஒரே இந்தியாவை வற்புறுத்துகிறார் வினு எழுப்பும் நண்பர்; ஆனால் நாமோ ஏறத்தாழ எட்டுகோடி திராவிடமக்களின் வளமான எதிர்காலத்தைச் சுட்டிக்காட்டித் திராவிட நாட்டுப் பிரிவினையைக் கோருகிறோம். வடநாட்டில் பணியாற்றும் தென்னவரின் வாழ்வு கெடக்கூடாது என்பதற்காக ஒரே இந்தியாவை ஒப்புக்கொள்வதா, அல்லது எட்டுகோடி திராவிட மக்களின் வாழ்வு கெடக்கூடாது என்பதற்காகத் திராவிடப் பிரிவினையை ஒப்புக்கொள்வதா என்று கேட்டால், எட்டுகோடி திராவிட மக்களின் வாழ்வு கெடக்கூடாது என்பதற்காகத் திராவிடப் பிரிவினை வேண்டும் என்பதைத்தான் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று நாம் வற்புறுத்தி வருகிறோம்.

திராவிடம், பிரிந்த பிற்பாடு, வடநாட்டிலுள்ள தென்னவர்களைத் தன்னகத்தே ஏற்றுக்கொண்டு காப்பாற்றினாலும் காப்பாற்றும், ஆனால் வடநாட்டிலுள்ள தென்னவர்கள் ஒரே இந்தியாவில் இருந்துகொண்டு திராவிடத்தைக் காப்பாற்ற முடியாது; காப்பாற்ற வடநாட்டு ஆதிக்கக்காரர்கள் விடமாட்டார்கள்.

திராவிடம் பிரிந்துவிட்டால், வடநாட்டிலுள்ள தென்னவர்கள், வாழ்க்கைக்கான பணி ஆற்ற முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்று எண்ணத் தேவையில்லை. அவர்களில் பலரைத் திராவிடமே விரும்பி அழைத்துக் கொள்ள நேரிட்டாலும் நேரிடும். வடநாட்டில் இப்பொழுதுள்ளவர்கள் அவர்கள் வாழ்நாள்

வரையிலும் பணியாற்றி வரும்படியான நிலை நீடிக்குமேயொழிய, அவ்வளவு எளிதாக அவர்களெல்லாம் விரட்டியடிக்கப்படும்படியான நிலை ஏற்படும் என்று எதிர்பார்க்கவேண்டியதில்லை. ஏனெனில் தென்னவர்களை நம்பித்தான் வடநாட்டில் பணிமனைகள் பலவும் நடைபெறவேண்டியிருக்கும். அவ்வளவு எளிதாகத் தென்னவர்களை விரட்டிவிட வடவர் எண்ணிடும் நிலை ஏற்படாது. அப்படியொரு நிலை ஏற்பட்டால், அதேபோல் வடவர்களை விரட்டிவிடும் நிலைக்குத் தென்னகமும் வரும். அப்படிப்பட்ட தென்னகம், வடநாட்டிலிருந்துவரும் தென்னவர்களை ஏற்றுக்கொள்ளும் ஆற்றல் படைத்ததாகத்தானிருக்கும். புதுப்புதுத் துறைகளையும், புதுப்புது அலுவலகங்களையும், புதுப்புதுப் பெருந்தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தும் திராவிடம், வடநாட்டிலுள்ள அறிவும் ஆற்றலும் படைத்த தென்னவர்களைத், தானே விரும்பி அழைத்து, வேலை கொடுக்கும் நிலைக்கு வந்து சேரும் என்பது உறுதி.

உலகில், பல சின்னஞ்சிறு நாடுகள், தனித் தனியே பிரிந்து வாழுவதால்தான், தம் விருப்பத்திற்கேற்ற முறையில், தம் போக்கில், தம்மைத்தாமே கட்டிக் காத்து வளர்த்துக் கொள்ள முடிகின்றது. அவைபோலவே திராவிடமும் வாழவேண்டும் என்று எண்ணுவது எப்படித் தவறான கருத்தாகும்?

பாக்கித்தான் பிரிவினையின்போது, இரு சார்பிலும் ஏற்பட்டதுபோன்ற விரட்டியடிக்கும் நிலை, திராவிடப் பிரிவினையின்போதும் ஏற்படும் என்று எவரும் எண்ணவேண்டியதில்லை. ஏனெனில் பாக்கித்தானை உருவாக்கிய போது ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலையே வேறு; திராவிடப்பிரிவினைக்காக நாம் உருவாக்கிவரும் சூழ்நிலையே வேறு. இந்து-முஸ்லிம், ஒருவரை யொருவர் விரட்டியடிப்பது என்பதுதான் பாக்கித்தான் பிரிவினைக்கு அவசரக் காரணமாக இருந்தது. அப்படிப்பட்ட ஒரு அவசரக் காரணத்தைத், திராவிடப் பிரிவினையைப் பொறுத்து ஏற்படுத்த, நாம் எக்காலத்திலும் விரும்பியதில்லை; இனியும் விரும்பமாட்டோம். எனவே திராவிடப் பிரிவினையின்போது வடவர்கள் தென்னாட்டிலிருந்தோ அல்லது தென்னவர்கள் வடநாட்டிலிருந்தோ வன்முறையால் விரட்டியடிக்கப்படுவார்கள் என்று அஞ்சவேண்டியதில்லை.

திராவிடம் பிரிந்த பிறகு வடநாடும் தென்னாடும் நல்லுறவோடு வாழ்வதற்கான சூழ்நிலை நிலவும் என்று எதிர்பார்ப்பதால், வடநாட்டில் பணியாற்றும் தென்னவர்களின் நிலை கெடும் என்று எண்ணவேண்டியதில்லை. அப்படியே கெடுவதாக இருந்தாலும், அவர்களை ஏற்றுக் காற்பாற்றும் நிலையைத் திராவிடம் பெறும் என்பது உறுதி.

❖ ❖ ❖

வினா: "கொலைவாளினை எடடா, மிகக் கொடியோர் செயலறவே" என்ற பாரதிதாசனின் பாடலைப் பன்முறைப் பலமேடைகளிலே வீரமாகச் சொல்லிக் காட்டும் தி. மு. கழகத்தார் கொலைவாளினைத், திராவிடக் கழகத்தார் போல கையில் ஏந்தத் தயங்குவதேன்?

விளக்கம்: முதலில் பாரதிதாசன் பாடலின் பொருளை வினா எழுப்புவோர் நன்கு உணர வேண்டும். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தாம் சொல்ல எண்ணிடும் கருத்தினைச் சாதாரண உரைநடையில் கூறாமல், இலக்கிய நயம் பொருந்திய கவிதை நடையில், கூறுகிறார் என்பதை அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

கவிஞர் 'கொலைவாளினை' எடுக்கச் சொல்லுகிறார்! எதற்கு எடுக்கச்சொல்லுகிறார்? ஆளைக் கொல்லவா வாளினை எடுக்கச்சொல்லுகிறார்? அல்ல, அல்ல! பின் எதற்கு? கொடியோரின் செயலை அறுக்க, எடுக்கச்சொல்லுகிறார்! கொடியோரின் செயலை அழிக்க வேண்டும் என்னும் கருத்தைக் கூறவந்த கவிஞர், "கொலைவாளினை எடுத்துச் செயலை அறு" என்ற கூற்றைக் கவிதை நடையில் கூறுகிறார். அவ்வளவுதானே ஒழிய, "இரும்பு வாளை எடுத்து ஆளைக் கொல்லு" என்பதல்ல! எனவே அந்தக் கவிதையைத் தி. மு. கழகத்தவர் பன்முறை சொல்லுவதில் தவறு ஏதும் இல்லை என்க!

திராவிடக் கழகத்தார் இதுவரையில் எந்தக் கொலைவாளினையும் ஏந்தவுமில்லை, எந்தப் பார்ப்பனருடைய தலையையும் வீழ்த்தவுமில்லை என்பதையும் வினா எழுப்புவோர் உணரவேண்டும். கத்தியை எடுத்துப் பார்ப்பனரைக் குத்துகிற முறையைத் தி. மு. கழகத்தார் விரும்பவுமில்லை; ஆதரிக்கவுமில்லை! பார்ப்பனரல்லாதாரை எந்த முறையில் பகுத்தறிவாளராக ஆக்க முற்படுகிறார்களோ, அதே முறையில்தான் பார்ப்பனரையும் ஆக்க முற்படுகிறார்கள்.

மலர்க்காடு

" கன்னற் பொருள்தரும் தமிழே
நீயோர் பூக்காடு நானோர் தும்பி "

அலெக்ஸாண்டர்

[ஆசிரியர் : கௌதமன். பக். 228. விலை: ரூ. 2—0—0. கிடைக்குமிடம் : சிந்தனையாளர் பதிப்பகம், 68. அப்பு முதலித் தெரு, சென்னை-4]

கிரேக்க மாவீரன் அலெக்சாண்டரின் கொற்றம் நிறைந்த வெற்றி வரலாறு இந்நூல். உலக மாவீரர்களிலே அலெக்சாண்டர் ஒருவன் என்பதை எவரும் அறியக்கூடும். அவன் வரலாறு சுவைபல நிறைந்தது. ஆசிரியர் கௌதமன் அலெக்சாண்டரை நமக்கு நல்ல முறையில் அறிமுகப்படுத்துவதோடு, அவன் காலத்திய கிரேக்க நாட்டையும் ஆங்காங்கு அறிமுகப்படுத்திவைக்கிறார். அலெக்சாண்டரைப்பற்றிய பல நூல்களையும் படித்தறிந்து, கொழித்தெடுக்கப்பட்ட கருத்துக்களை வைத்துக்கொண்டு ஆசிரியர் இந்நூலை வரைந்துள்ளார்.

❋

சென்னை மாநகர்

[ஆசிரியர் : மா. சு. சம்பந்தன், பக். 192. விலை ; ரூ. 2—0—0. கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை.1.]

சென்னை எப்படியெல்லாம் இருந்து, எப்படியெல்லாம் வளர்ந்து, எப்படியெல்லாம் வந்திருக்கிறது என்பதை அழகான முறையில் விளக்கிக் காட்டுகிறது இந்நூல். இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கும் சென்னை மாநகரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள், படிக்கப்படிக்கச் சுவை பயப்பனவாக அமைந்திருக்கின்றன. ஆசிரியர் தோழர் மா. சு. சம்பந்தன் (தொடர்பன்) அவர்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் முறையைத் திறம்படக் கையாண்டுள்ளார். இந்நூலைப் படித்து முடித்துவிட்டபிறகு, " யான் எடுத்திருக்கும் குறிப்புகள் அனைத்தையும் இந்நூலில் பயன்படுத்த முடியவில்லை. ஒரு பகுதியைக் கொண்டே இதை உருவாக்கியுள்ளேன் " என்று ஆசிரியர் தம் முன்னுரையில் கூறியிருப்பதை நோக்கும்போது, விட்டுப்போன பிற குறிப்புகளையும் காணவேண்டும் என்ற ஆவல் நம் உள்ளத்தே ஊறி எழுகின்றது. இந்நூலில் பல ஆங்கில—வடமொழிச் சொற்களுக்கு ஏற்ற இனிய தனித்தமிழ்ச் சொற்களைக் கையாண்டிருப்பது போற்றி வரவேற்கத்தக்கதாகும். நடை எளிமையாகவும், இனிமையாகவும் அமைந்து இன்பம் பயக்கிறது.

❋

நற்றமிழ்

[ஆசிரியர் : நாவலர் ச. சோமசுந்தர பாரதியார். பக். 122. விலை : ரூ. 2—0—0. கிடைக்குமிடம் : மலர் நிலையம், 133, பிராட்வே, சென்னை.]

வாதிட்டுப் பேசும் வல்லமையும், தாம் கொண்ட கருத்தைத் துணிந்து வெளியிடும் ஆற்றலும் படைத்த நாவீறுகொண்ட நாவலர் தோழர் ச. சோ. பாரதியார் அவர்கள் பல்வேறு பொழுதுகளில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். சொற்செறிவும், பொருளாழமும்கொண்ட கட்டுரைகள் பதினைந்து இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன. தமிழ்ப் புலவர்களுக்கும், தமிழார்வங்கொண்டோர்க்கும் இந்நூல் சுவையும் பயனும் விளைவிப்பதாகும்.

❋

காவியம்

[ஆசிரியர் : சுரதா. பக். (அரை கிரௌன் அளவு) 4. விலை : தனி இதழ் அணா 1.]

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பரம்பரையிலே வந்து, அவரின் புரட்சிக் கவிதைகளிடம் கொண்ட நீங்காப் பற்றின் காரணமாகச், சுப்புரத்தின தாசன் என்று பெயரமைத்துக் கொண்ட தோழர் சுரதா அவர்களால் வெளியிடப்பெறும் கவிதைக் கிழமை இதழே "காவியம்" ஆகும். முன்பு புரட்சிக்கவிஞர் வெளியிட்டுவந்த "பாரதிமண்டிலம்", "குயில்" போன்று, செய்திகள்—கருத்துக்கள்—விளம்பரங்கள்—அறிவிப்புகள் எல்லாம் கவிதை நடையிலேயே இவ்விதழில் வெளியிடப்படுகின்றன. கவிஞர் சுரதாவின் கவிதைகள் நெஞ்சையள்ளும் தன்மையன என்பதைப் பலரும் அறிவர். அவர் கவிதை வண்ணத்தைக் "காவியத்"திலே முழுக்க முழுக்கக் காணலாம்; தமிழ்ப் பெருங்குடிமக்கள் அதனைப் படித்துப் பயன்பெறுவார்களாக!

அறிவுப்புதிர் - விளக்கம்

சரியானவை : 1, 3 தவறுனவை : 2

1. அனேகமாக இந்தப் புதிருக்கு முதலில் தவறுன விடையையே யாவரும் அளிப்பார்கள். ஆனுல் உலகம் உருண்டை, அட்சரேகைகள் (Latitudes) இணையான (Parallel) கோடுகள், தீர்க்கரேகைகள் (Longtitudes) இணையற்ற கோடுகள், என்ற உண்மைகளை உணர்ந்துகொண்டால், விடைக்குரிய விளக்கத்தை எளிதில் புரிந்துகொள்ளலாம்.

பூமியை 360 வடக்கு—தெற்குக் கோடுகளாகவும் (தீர்க்கரேகைகள்), 180 கிழக்கு—மேற்குக் கோடுகளாகவும் (அட்சரேகைகள்) பிரித்திருக்கிருர்கள். தீர்க்கரேகைகள் ஒரு துருவத்திலிருந்து ஆரம்பமாகி மறுதுருவத்தில் முடிகின்றன. துருவத்தை நெருங்க நெருங்க ஒவ்வொரு ரேகைக்கும் இடையேயுள்ள தூரம் குறைந்துகொண்டேவந்து துருவத்தில் ஒரே புள்ளியில் கூடும். பூமத்திய ரேகையை வெட்டுமிடத்தில் ஒவ்வொன்றிற்கிடையேயும் அதிகமான தூரம் இருக்கும். ஆனுல் அட்சரேகைககளுக்கு ஆரம்பம் முடிவு எதுவும் கிடையாது. வளையத்தைப்போல பூமியைச் சுற்றி இருக்கிறது. ஒவ்வொரு ரேகைக்கும் இடையேயுள்ள தூரம் எங்கும் ஒரே அளவாக இணையாக இருக்கிறது.

இப்பொழுது ஒரு ஆகாயவிமானம் ஒரு புள்ளியிலிருந்து, அது O என்று வைத்துக் கொள்ளுங்கள், வடக்கு நோக்கி 300 மைல் போகிறதென்ருல், O வைத் தொட்டுச் செல்லும் தீர்க்கரேகையில் 300 மைல் போகிறதென்று பொருள். திரும்பும் புள்ளிகள் முறை A, B, C என்று வைத்துக்கொள்ளுங்கள், கிழக்குநோக்கி A யிலிருந்து B வரை போகிறது. அதாவது A, B இரண்டு புள்ளிகளைத் தொட்டுச் செல்லும் அட்சரேகையில் போகிறது. தெற்குநோக்கி B யிலிருந்து C வரை போகிறது. அதாவது B, C என்ற புள்ளிகளைத் தொட்டுச்செல்லும் தீர்க்கரேகையில் போகிறது. மறுபடியும் விமானம் C யில் திரும்பி O வை நோக்கி 300 மைல் செல்லுகிறது. அதாவது C, O என்ற புள்ளிகளைத் தொட்டுச் செல்லும் அட்சரேகையில் போகிறது.

அட்சரேகைகளுக்கிடையேயுள்ள தூரம் எங்கும் ஒரே அளவானதால் O A தூரம் B C தூரத்திற்குச் சமம். ஆனுல் A B தூரம், C O தூரத்திற்குச் சமமாகாது. ஏனெனில் தீர்க்கரேகைகளுக்கிடையுள்ள தூரம் துருவத்தை நெருங்க நெருங்க குறைந்துகொண்டேபோகும் ஆகவே A B தூரத்தைவிட C O தூரம் அதிகமாகும். A B யின் தூரம் 300 மைலாதலால் C O யின் தூரம் 300 மைலுக்கு அதிகமாகும். ஆகவே விமானம், C என்ற புள்ளியில் திரும்பி 300 மைல் மேற்கே பறந்தால் O விற்குக் கிழக்கே கொஞ்சதூரத்தில் வந்து நிற்கும். O வை அடையாது.

2. ஞாயிறு ஒரே இடத்தில் நிலையாக இருக்கவில்லை. எர்குலஸ் (Hercules) என்றழைக்கப்படும் ஒரு நட்சத்திரக்கூட்டத்தின் ஒரு புள்ளியை நோக்கி தனது கிரகங்களையும இழுத்துக்கொண்டு விநாடிக்கு 12 மைல் வேகத்தில் சென்றுகொண்டிருக்கிறது.

3. திங்கள் தன்னைத்தானேயும் சுற்றிக் கொள்கிறது. அது பூமியைச் சுற்றிவரும் அதே வேகத்தில் தன்னையும் சுழற்றிக்கொள்வதால்தான், நாம் திங்களின் ஒரே பகுதியை எப்போதும் காணவேண்டியிருக்கிறது, திங்கள் பூமியைச் சுற்றிவர ஆகும் நேரம் சராசரியாக 29 நாட்கள், 12 மணி, 44 நிமிடம் 2·78 விநாடி.

'மன்றம்' அளித்திடும் முதல்

பொங்கல் மலர்

கதைகள், கவிதைகள், கட்டுரைகள், ஓரங்க நாடகங்கள் !
பல கருத்தோவியங்கள் இடம்பெறுகின்றன.

மூவண்ண முகப்பு! பக்கங்கள் 100 விலை ரூ. 1-0-0

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்"

மலர் - 3 1954 - 55

24 இதழ்கள் கொண்ட பைண்ட் செய்யப்பட்ட மலர்

ஒன்று

விலை ரூ. 8 0 0

(தபாற்செலவு உட்பட)

விற்பனைக் கழிவு இல்லை. முன்பணம் அனுப்புதல் வேண்டும்.

வி. பி. கிடையாது.

(மலேயா தோழர்கள் ஒரு புத்தகத்திற்கு ரூ. 10 வீதம் அனுப்பவேண்டும்.)

விபரங்கட்கு :

"மன்றம்"

26, நைனியப்பன் தெரு,

மண்ணடி :: சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.